"ஆஸாத்"

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்துஹு மாசிமீ 11உ 23—2—1948 ஹிஜிரி 1367 ரபியுலாகிர்மீ 12உ திங்கட்கிழமை. } இதழ் 5

மஹாத்மா நினைவு.

பிஹார் மந்திரி டாக்டர் சையத் மஹ்மூத் ரேடியோ பிரசங்கம்.

மஹாத்மாவின் மரணம் தேசத்தின் மரணமாகும். குறைத்து மதிப்பிட்டாலும் இந்திய ஒழுக்கத்தின் மரணம் என்பது நிச்சயம். அமைதி, அன்பு, சமாதானத்தின் மரணம். சமாதானம் அமைதிக்கு உலகம் மஹாத்மாவையே நம்பி இருந்தது. அதைக் குறித்து எவ்வளவு பிரலாபித்தாலும் குறைவுதான் பொருமையுடன் இருக்க சொல்லப்படுகிறது வேறு வழி ஒன்றுமில்லையென்பது உண்மையே ஆயினும் தேசம் நம்பிக்கை இழந்து, சமுதாயமே நடுக்கடலில் தவிக்கும்படி செய்துவிட்ட மரணத்தை பொருமையுடன் எப்படி சகிக்க முடியும்!

சுதந்திரத்தை நாடி எகிப்திலிருந்து வெளியேறிய யூதர்களுக்கு தீர்க்கதரிசி மோஸே, வழி காட்டினார். யூதர்கள் ஏற்கவில்லை. அதன் பயனாக 40-வருஷங்கள்வரை பாலைவனத்தில் அலைந்து கெட்டனர். பிறகும் மோஸேயின் வழியை அவர்கள் பின்பற்றவில்லை. முடிவில் ஆட்சியையும் இழந்தனர். இன்றுவரை யூதர்களின் ஆட்சி அமையவில்லை.

விடுதலை வாங்கித்தந்த மஹாத்மா மனவேதனை அடைந்தார். அவருடைய போதனைகளை புறக்கணித்தோம். தான்தோன்றிகளாய் அவர்காட்டிய வழியை விட்டு அவருடைய உபதேசங்களை அலட்சியம்செய்து அவர் மனம் நோக வைத்தோம். சமீபத்தில் நடந்த சம்பவங்கள் எல்லோருக்கும் தெரியும். மஹாத்மாஜீயைவிட்டு வேறு வழியை மேற்கொண்டதன் பலன் உணர்ந்தும் ஆயிற்று.

பயங்கரக்கடலில் சிக்கி, அந்தகாரத்தில் அகப்பட்டுக்கொண்ட நமக்கு வழிகாட்ட ஒரு சுடர் விளக்கு இருந்தது. அதன் பிரகாசம் சரியான வழி காட்டும் என்று நம்பினோம். துரதிஷ்டம்பிடித்த சமுதாயம் அந்த விளக்கையும் அணைத்துவிட்டது. இன்று இந்தியாவை இருள் கவ்விக்கொண்டது. துன்பக்கடலின் அலைகள் மோதுகின்றன. படகில்லை. படகோட்டியுமில்லை. யூதர்களின் கதி நமக்கும் நேருமோ என்று நினைக்கும்போது நெஞ்சம் நடுங்குகின்றது. ஆட்சி செலுத்த யோக்கியதை அற்றவர்கள் என்று நாம் உலகுக்கு அறிவித்துவிட்டோம். நம்மைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்த உலகம் இன்று நம்மை சபித்துக்கொண்டிருக்கிறது.

சரித்திரம் திருப்பிப் படிக்கப்படுகிறதா ? உண்மையை எடுத்துரைத்த குற்றத்திற்காக சாக்ரடீஸுக்கும், ஷம்ஸ்தபரேஸுக்கும் விஷம்கொடுக்கப்பட்டது மன்ஸூரைக்கொன்று அப்பாஸியா ஆட்சி அடைந்த கதி, சையத் மௌலாவைக்கொன்ற பஹ்மினி ஆட்சியின் அழிவு, ஸர்மத்தைக் கொன்ற மொகலாய சாம்ராஜ்யத்தின் சிதைவு உலகுக்குத்தெரியும். பாப மன்னிப்புக்காக பச்சாத்தாபப்பட்டு அந்தரங்க சுத்தியுடன் சரித்திரம் திருப்பிப்படிக்கப்படாமல் இருக்க ஆண்டவனை நாம் பிரார்த்திக்கவேண்டும்.

நெருங்கிப் பழகுபவர்களிடம் மனதிலுள்ளதை மஹாத்மா வெளியிடுவதுண்டு "ஹிந்துக்கள் என்னை பூஜிக்க ஆசைப்படுவது என்னவோ நிச்சயம். ஆயினும் என்னுடைய உபதேசத்தைக் கேட்க அவர்கள் தயாராக இல்லை. இன்று முஸ்லிம்கள் நான் சொல்லுவதைக் கேட்க நீர் சொரியும் கண்களுடன் காத்திருக்கின்றனர்" என்று சமீபத்தில் மஹாத்மாஜி என்னிடம் சொன்னார்.

இன்று முஸ்லிம்கள் கண்ணீர் வடிப்பது உண்மை. இனி அழுவதில் என்ன பயன்! காலம் கடந்துவிட்டது. கடந்த 20-வருஷங்களாக மஹாத்மாவை முதல்தர எதிரி என்று சொல்லிவந்தனர். மஹாத்மாஜி யாருக்கும் விரோதியல்ல அவர் அனை

வருக்கும் நண்பரே என்று நாம் எவ்வளவோ சொல்லியும் முஸ்லிம்கள் கேட்கவில்லை 'காலம் கடந்தபிறகு இன்று முஸ்லிம்கள் உண்மையை உணர்ந்திருக்கின்றனர்

ஹிந்துக்களில் படித்தவர்களின் ஒரு கோஷ்டி இன்று மஹாத்மாவை ஹிந்துக்களின் சத்ரு என்றும், ஹிந்து தர்மம், கலாசாரத்தின் எதிரி என்றும் எண்ண ஆரம்பித்துவிட்டது ஹிந்து தர்மம், கலாசாரம் என்று வாயளவில் சொல்லுபவர்கள் உண்மையில் ஹிந்து மதத்தையும், தர்மத்தையும், கலாச்சாரத்தையும் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை உணர்வதற்கு போதிய ஆற்றலும் அவர்களுக்கு இல்லை.

மனிதவர்க்கத்திடம் அன்பு, சேவை, மனோபாவம், நன்மை செய்வதில் ஆர்வம் முதலியவைகளே ஹிந்து தர்மம். கலாச்சாரம் என்று அழைக்கப்படுகிறது ஹிந்து தர்மம், கலாச்சாரம் என்பது பதவிகள், உத்தியோகங்களின் பெயரல்ல. தர்மம், கலாசாரத்தைப் பற்றி வாயளவில் பேசி வந்தவர்கள் இன்று உலகத்தின்முன் தங்கள் பெயரை தாழ்த்திக் கொண்டு விட்டனர். ஹிந்து தர்மத்தின் எதிரி என்று அவர்களால் அழைக்கப்பட்ட மஹாத்மா காந்தி தர்மத்தைக்காக்க உயிரை அர்ப்பணம் செய்து ஹிந்துதர்மத்தையும், கலாச்சாரத்தையும், ஒழுக்கத்தையும், உலகத்தில்உயர்த்திவிட்டார். இனி யாரும் அதை அழிக்கமுடியாது. ஹிந்து தர்மம் என்ன என்பதை மஹாத்மா காந்தி உலகுக்கு எடுத்துக்காட்டிவிட்டார்.

போராட்ட சமயங்களில் காங்கிரஸ்காரர்களின் அந்தரங்கங்கள் எல்லாம் ஆங்கிலேயர்களுக்கு தெரிந்திருக்க முடிந்தபோது இவ்வளவு பெரிய சதி பற்றியதகவல் சர்க்காருக்கு கிடைக்காமல் எப்படிப்போய் விட்டதென்று கேட்கப்படுகிறது.

தேசம் பூராவிலுமே இதைப்பற்றி பேசப்பட்டே வந்தது. பொதுவாகஇந்த துர் எண்ணம் வெளியிடப்பட்டும் வந்தது. மஹாத்மாவையும், பண்டித நேருவையும் கொல்ல 40-லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக தன்னிடம் ஒருவர் அறிவித்தாரென்று இந்திய சர்க்காரில் பெரிய பதவிவகிக்கும் பிரபலஸ்தர் ஒருவர் நவம்பரிலேயே டில்லியில் என்னிடம் சொன்னர். இனி நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதற்காகவே இதை சொல்லுகிறேன். "ஆங்கில ஆட்சியினிடம் 30-வருஷம் வரை ஒப்படைக்கப்பட்டிருந்த மஹாத்மாவின் உயிர் ஜாக்கிரதையுடன் பாதுகாத்து இந்தியாவிடம் திரும்ப ஒப்படைத்துவிட்டு திரும்பினோம்," என்று சமீபத்தில் ஆங்கிலேயர் ஒருவர் வெளியிட்டார். இந்த அறிக்கையை பார்த்து நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. இன்று நம்மிடம் பண்டிதநேரு, சர்தார் படேல், மௌலானா ஆஸாத், ராஜன் பாபுவின் உயிர் பாக்கியிருக்கின்றது. அதையும் நாம் காப்பாற்ற முடியாமல் போனல் நம் படகு மூழ்குவதென்னமோ நிச்சயம்.

தேசத்தின்படகு மூழ்குவதினின்றும் காப்பாற்ற காங்கிரஸ் போராட்ட காலங்களில் ஒன்று பட்டுத் தொண்டாற்றியதைப் போலவே இன்றைக்கும் இந்த நான்கு தலைவர்களும் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டியதவசியம். அவர்களின் உயிரைக் காப்பாற்றுவது பொதுமக்களின் பொருப்பு.

காங்கிரஸ்காரர்கள் நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை உணரவேண்டும். சுதந்திரம் கிடைப்பதற்குமுன் உயிர், உடல், உடமையை அர்ப்பணித்து சேவையில் ஈடுபட்டிருந்ததைப்போல் சில்லரைபேதங்களை மறந்து அவர்கள் ஒன்றுபடவேண்டும். குறுகிய நோக்கம் இருக்கும்வரை சர்க்காருடன் ஒத்துழைப்பு சாத்தியமில்லை.

மஹாத்மா காந்தி காட்டியவழியை பின்பற்றி காங்கிரஸ் மஹா சபைஒன்றுதான், இந்த நாட்டைக் காப்பாற்றமுடியும். காங்கிரஸ் தோல்வியுற்றால் எந்த கட்சியும் தேசத்தைக் காப்பாற்றிவிட முடியாது என்பதை மக்கள் உணரவேண்டும்.

முதன் முதலாக 1909-ல் மஹாத்மாஜியை லண்டனில் சந்தித்தேன். அப்பொழுது அங்கு மாணவனாக இருந்தேன். காந்திஜி வெஸ்ட் மினிஸ்டர் பாலஸ் ஹோட்டலில் தங்கியிருந்தார். பிராக் கோட்டும், டாப் ஹாட்டும் அணிவது அவர் வழக்கம். இந்தியாவிலிருந்து, திரு குர் ஆன் பிரதி ஒன்று என் மூலம் தருவித்தார்.

அதன்பிறகு 1916-ல் லக்னோ காங்கிரஸின்போது அவரைப் பார்த்தேன். அப்பொழுது அவர் ஒரு பிச்சைக்காரன் போல் தோற்றமளித்தார். எனக்கு அவர் மீது இரக்கம் பிறந்தது. சட்டைப்பையில் இருந்த சில தங்கக்காசுகளை எடுத்து அவருக்குக் கொடுக்க வேண்டுமென்றுகூட என் மனதில் உதித்தது. அதன் பிறகு 1918-ல் பாங்கிபூரில் மிஸ்டர் மஸ்ஹருல் ஹக் விருந்தாளியாக அவர் தங்கியிருந்தபோது சந்தித்தேன். 2, 3 மாதங்கள் தினம் சந்திப்பு இருந்தது. 1921-ல் பாட்னு வந்தபோது மிஸ்டர் மஸ்ஹருல்ஹக் வீட்டில் தங்கினர். அலி சகோதரர்கள் என் வீட்டில் தங்கியிருந்தனர். வக்கீல் தொழிலை விட்டுவிடும்படி என்னை அவர்கள் நிர்ப்பந்தித்தனர். நான் ஒப்புக்கொள்ளவில்லை. காந்திஜியிடம் என்னை அழைத்துச் சென்றனர். என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் ஆனல் அவர் சொல்லும்பட்சத்தில் தொழிலை விடத்தயார் என்றும் நான் காந்திஜியிடம் சொன்னேன். "குறிப்பிட்டு ஒருவருக்கும் நான் சொல்வதில்லை ஆயினும் உங்களுக்குச் சொல்லுகின்றேன். நீங்கள்

வக்கீல் தொழிலைவிட்டு தேசசேவையில் ஈடுபடுங்கள்'' என்று மஹாத்மாஜி உத்திரவிட்டார். நான் உடனே வக்கீல் தொழிலை விட்டேன். அதன்பிறகு காந்திஜியுடன் எனக்குள்ள தொடர்பு வளர்ந்துவந்தது. என் மீது அவருக்கு தனி வாத்ஸல்யம் உண்டு. தன்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனாகவே அவர் என்னை பாவித்துவந்தார்.

அவரிடம் நான் கண்ட பல விஷயங்களை விவரிப்பதற்கு இது சந்தர்ப்பமல்ல. ஆனால் அவர் ஒரு பெரிய மஹான். ஆண்டவனை அறிந்த உண்மையான ஸாது, என்று நான் உறுதிகொள்ள அவை போதுமானவையாக இருந்தன. அளவற்ற அலுவல்களிலும் ஒவ்வொரு மனிதனுடைய சொந்த விஷயங்களையும் பொறுமையுடன் கேட்டு அவர்களுக்கு தகுந்த யோஜனையும் கூறுவார். அவர் வாழ்க்கை முழுதும் நட்பைக் காப்பாற்றும் உத்தம நண்பர். மனித பலஹீனத்தை உணர்ந்து குற்றங்களை மன்னிப்பதில் கொஞ்சமும் தயங்காத தயாளு. ஒருவனை நம்பினால் பூரணமாக நம்புவார். ஒருசமயம் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அந்தரங்கம் ஒன்று வெளிப்பட்டுவிட்டது. நான் வெளியிட்டிருப்பேனென்று அவரிடம் யாரோ சொன்னார். எனக்கு அது தெரிந்தது.

அது என்னுடையவேலை அல்லவென்று ஆதாரங்களை சமர்ப்பித்தேன். "நீங்கள் வெளியிடவில்லையென்று சொன்னது ஒன்றே எனக்கு போதும். ஆதாரங்கள் காட்டுவது, நான் உங்களை நம்பவில்லை என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது." என்று வருத்தப்பட்டார். இது ஒருவரிடம் கொள்ளும் அவருடைய நம்பிக்கையையே காட்டுகிறது.

ஜவஹர்லால்மீது அவருக்கு பிரியமதிகம். எனக்கும் ஜவஹர்லால்மீது அதிக பிரியமாதலால் அவரைப்பற்றி என்னிடம் அடிக்கடி பிரஸ்தாபிப்பார்.

சுதந்திரத்தைக் காட்டிலும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையில் அவருக்கு ஆர்வம் அதிகம். கிலாபத் இயக்கத்தை அவர் ஆரம்பித்தார். 1924-ல் முதல் உண்ணாவிரதம் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக இருந்தார். அவருடைய கடைசி உண்ணாவிரதமும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகவே அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் திருப்தியடைய அவரால் முடியவில்லை. முடிவாக ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகவே ஆத்மீக யாகமும் செய்தார்.

இனியாகிலும் முஸ்லிம் சகோதரர்கள் இதை உணரவேண்டும். மகாத்மாஜி என்னிடம் அடிக்கடி "முஸ்லிம்கள் இல்லாமல் ஸ்வர்க்கத்தில் போகவும் நான் சம்மதிக்கமாட்டேன்" என்று சொல்லுவார். இன்று அவருக்காக கண்ணீர்வடிக்கும் ஹிந்துக்கள் இனியாகிலும் இதை உணர்ந்து அவருடைய கடைசி ஆசையான ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை வெற்றி பெறச்செய்யவேண்டும்.

அவருடைய வாழ்க்கையில் பூர்த்தியாகாமல் இருந்துவிட்ட ஆசை அவர் மறைவுக்குப் பிறகாவது நாம் பூர்த்தி செய்வதன் மூலம் அவருடைய ஆத்மா சாந்திடைய செய்வோம். இச்சம்பவத்தைக் குறித்து ரத்தக்கண்ணீர் வடிப்பது பிராயச்சித்தமல்ல. அவருடைய ஆசையை பூர்த்திசெய்வதுதான் பிராயச்சித்தம். அவருடைய ஞாபகார்த்தத்தை நிலைநாட்ட விரும்புகிறோம். உண்மை, அஹிம்சை, ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமையே அவருக்கு சிறந்த ஞாபகார்த்தம். அவர் காட்டிய வழியை புறக்கணித்தால் நாம் அழிவோம்.

அவர் சம்பந்தப்பட்டவரை அமரத்வம் அடைந்துவிட்டார். அவருடைய ஆத்மீக தியாகம் அவருக்கு பரிபூரணத்வம் அளித்து நிரந்தர வாழ்க்கையை கொடுத்துவிட்டது. அவருடைய வாழ்க்கையில் பூர்த்தியடையாமல் இருந்துவிட்டதை அவருடைய ஆத்மீக தியாகம் பூர்த்திசெய்யும். சாக்ரடீஸ், ஏசுநாதர், இமாம் ஹுஸைன் முதலிய பெரிய தியாகிகளின் வாழ்க்கை நமக்கு இவ்வித நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கின்றது.

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய

"ஆஸாத்"

அவசியம் படிக்கவேண்டும்.

"ஆஸாத்"

(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை)

உங்கள் ஊரில் ஏஜண்டிடம் கேளுங்கள். உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை. "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்துகொள்ளுங்கள்.

மேனேஜர்

"ஆஸாத்"

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 23—2—48 திங்கட்கிழமை { இதழ் 5

— இந்திய முஸ்லிம்களும் — காஷ்மீரும்

காஷ்மீர் பிரச்னை பற்றி தாக்கல் செய்த புகாரை பாதுகாப்பு கவுன்ஸிலில் கையாண்ட முறை எதிர்பார்க்காததல்ல. பாகிஸ்தானிடம் அக்கறை கொண்டுள்ள பிரிட்டனும், அமெரிக்காவும் அதில் ஆதிக்கம் பெற்றிருக்கின்றன. இந்தியாவுக்கு நியாயம் கிடைக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை. ஆசியா சம்மந்தப்பட்ட தென்னாப்பிரிக்கா, பாலஸ்தீனம், இந்தோனேஷிய பிரச்னைகள் அடைந்த கதியே இந்தியா விழிப்படைய போதுமானது. பாதுகாப்பு கவுன்ஸிலிடம் காஷ்மீர்பிரச்னைசமர்ப்பித்தது இந்திய சர்க்காரின் அந்தரங்க சுத்திக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருப்பினும் அவசியத்தைவிட அதிகமான நேர்மை கொண்டதாகும். நிறுத்திவைத்திருந்த 50 கோடி ரூபாய் திருப்பிக்கொடுத்ததை எதிரிகள் மட்டுமின்றி, நம்மவர்களும் பரிகசிக்கின்றனர் காஷ்மீரில் புகுந்த குண்டர்களுக்கு இன்னும் பாடங்கற்பிக்கப் படவில்லை. காலிகளால் அங்குள்ளவர்களின் உயிர், உடமை, மானம் பத்திரமாக இல்லை. இன்று ஹைதரபாத்தில் நடப்பதை பிரிட்டிஷ் கவர்மெண்டு ஒரு விநாடிக்கேனும் சகித்திருக்காது. பஹாவல்பூர் சமஸ்தான எல்லையிலிருந்து ஜல்மீர் சமஸ்தானம் தாக்கப்பட்டது. இந்திய பிரதேசத்தின்மீதும் பாகிஸ்தானிலிருந்து தாக்குதல்கள் நடந்தன. பயனளிக்கத் தக்க முறையில் பதிலளிக்கப்படவில்லை. இதனால் பொதுவாக அவநம்பிக்கையும், மனத் தளர்ச்சியும் உண்டாகலாம். இந்தப்போக்கு கோழைத்தனமானதென்றுகூட கருதப்படுகிறது. கவலையளிக்கத்தக்க தன் நிலையை உணர்ந்து சர்க்கார் பாகிஸ்தானுக்கு புத்தி புகட்டத்தக்க நடவடிக்கைகளில் இறங்கவேண்டியது அவசியம்.

காஷ்மீர்பிரச்னையை இந்திய முஸல்மான்கள் சரியாக உணரவேண்டும். இந்தியாவை தாயகமென்று நினைக்கும் ஒவ்வொருவரும் இந்தியா விஸ்தரிக்கப்படுவதை வரவேற்காமல் இருக்க முடியாது.எனினும் ஜனநாயகத்தை ஆதரிக்கும் நாம் நியாயமற்ற முறையில் நாடு விஸ்தரிக்கப்படுவதை ஆதரிக்க முடியாது. அதை சாம்ராஜ்யம் என்றே சொல்லவேண்டும். நாம் என்றுமே சாம்ராஜ்ய வாதிகளாக இருந்ததில்லை. இந்தோனேஷியாவை ஆக்ரமித்து அங்குள்ளவர்களை அடிமைப்படுத்த இந்தியா முயற்சித்தால் அதை நாம் எதிர்க்கத்தான் வேண்டும். ஆனால் காஷ்மீர் பிரச்னை அப்படியல்ல.

காஷ்மீர் இந்தியாவின் ஒரு அங்கம். அதுமட்டுமல்ல. காஷ்மீர் முஸ்லிம்களில் 100-க்கு 90-பேரைக் கொண்ட காஷ்மீர் நேஷனல் கான்பரென்ஸ் தலைவர்கள் இந்தியாவில் சேரத்தீர்மானித்து விட்டனர். பொதுஜன வாக்கெடுப்புக்கும் அவர்கள் சம்மதிக்கின்றனர்.

100-க்கு 90-முஸ்லிம்களைக் கொண்ட காஷ்மீர் பாகிஸ்தானிலேயே இருக்கவேண்டும். எனவே தாக்குதல் நியாயமானதென்று சில லீக் லீடர்கள் நினைக்கலாம். அவ்வித எண்ணம் அபத்தமானது. அப்படியானால் பாகிஸ்தானை ஒட்டி ரஷ்யாவில் இருக்கும் முஸ்லிம்மெஜாரிடிபிரதேசங்களான தாஷ்கந்த்,புகாரா ஆஸர்பைஜான், கஸாகிஸ்தானையும், ஈரான், ஆப்கனிஸ்தானையும் பாகிஸ்தான் தாக்கவேண்டியிருக்கும்.

இந்திய முஸ்லிம்கள் மைனாரிடி என்பதற்காக மெஜாரிடி முஸ்லிம்கள் இருக்கும் பாகிஸ்தானுக்கு காஷ்மீரத்தை விட்டுக்கொடுக்க முடியாது. ரூபாயில் ஒரு அணா பங்காக இருப்பினும் அதைக்கூட இழக்க நாம் சம்மதிக்க மாட்டோம். முஸ்லிம் மெஜாரிடி பிரதேசங்கள் எல்லாம் பாகிஸ்தானுக்கே சொந்தம் என்று நினைப்பதாக இருந்தாலும் ஜூனாகட் விஷயத்தில் பாகிஸ்தான் ஏன் தலையிடவேண்டும்? அங்கு முஸ்லிம்கள் மெஜாரிடியாக இல்லை. 100க்கு 80-ஹிந்துக்களைக்கொண்ட ஹைதராபாத்தில் பாகிஸ்தானிகள் எதற்காக கைவரிசை காட்டவேண்டும் ?

இந்திய முஸல்மான்களாகிய நாம் இந்தியாவை விரும்புகிறோம். தேசிய சர்க்காரை நம்புகிறோம். ஆகையினால் தான் இங்கு இருந்து வருகிறோம். காஷ்மீர் பாகிஸ்தானில் சேரவேண்டுமென்று நினைப்பதாக இருந்தால் நாம் மட்டிலும் ஏன் இங்கு இருக்க வேண்டும் ?

அதிலும் ஏழை காஷ்மீர், பிச்சைக்கார பாகிஸ்தானில் சேர்ந்தால் அதன் எதிர்காலம் மங்கிவிடும். காஷ்மீர் முஸ்லிம்கள் பிச்சைக்காரர்களாக இருக்க நாம் விரும்ப முடியாது. மேலும் கில்கிட் வரை இந்திய ஆதிக்கத்தில் இருக்கவேண்டும். இல்லையேல் நம் தாயகத்தில் நாமும் நிம்மதியாக வாழமுடியாது.

எனவே ஒவ்வொரு இந்தியனும், குறிப்பாக ஒவ்வொரு முஸ்லிமும் ஷேக் அப்துல்லாவை ஆதரித்து நம் அருமை தாய்நாட்டை தாக்கியிருக்கும் கொள்ளை கூட்டத்தினரை விரட்டி அடிக்கத் தயாராய் இருக்க வேண்டும். காஷ்மீர் இந்தியாவில் சேர்ந்தால் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு அடிகோல முடியும். 'ஹிந்து ராஜ்ய' கோஷங்கள் ஒய்ந்து, முஸ்லிம்கள் நிறைந்த காஷ்மீர் இந்தியாவுடன் சேர்வதால் ஹிந்து முஸ்லிம்களின் பிரிந்த உள்ளங்கள் மீண்டும் ஒன்றுசேர முடியும்

நாலரை கோடி முஸ்லிம்களின் துன்பங்களை போக்குவதற்காகத்தான் ஷேக் முஹம்மது அப்துல்லாவை ஆண்டவன் தோற்றுவித்தார் போலும். காஷ்மீர் பிரச்னை இந்தியர்களின் முழு கவனத்தையும் கவரப்போகின்றது. அதில் நாம் அடையும் வெற்றி நம்மைப் பிணைக்க முடியும். எனவே காஷ்மீர் இந்தியாவில் சேர இந்திய முஸல்மான்கள் சாத்தியமான அனைத்தும் செய்யவேண்டும். லட்சக்கணக்கில் தொண்டர்கள் சென்று போர்புரியும் இந்தியத் துருப்புகளுக்கு உதவி செய்ய வேண்டும். இந்தியாவில் சேர்ந்து இந்திய பாகிஸ்தான் நல்லுறவுக்கும் ஐக்கியத்திற்கும் காஷ்மீர் ஒரு பாலமாக அமையமுடியும். ஷேக் அப்துல்லாவின் அறிவு, ஆற்றல், நமக்கு இவ்வித நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூண்டால் பாகிஸ்தானை எதிர்த்து போர் புரிவோமென்று அறிக்கைகள் விடுத்த முஸ்லிம் லீக் லீடர்கள் எங்கே? விஸ்வாஸத்தை காட்ட சந்தர்ப்பம் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக சீக்கிரமே வந்துவிட்டது.

காஷ்மீர் பிரச்னையும், பாதுகாப்பு கவுன்ஸிலும்

இந்திய விடுதலைக்குப் பிறகு காஷ்மீருக்கு இருந்த உகந்த வழிகள் இரண்டு.

(1) இந்திய டோமினியனில் சேர்ந்துகொள்ளுதல்,

(2) சுதந்திர நிலையை மேற்கொண்டு இந்தியா, பாகிஸ்தானுடன் நல்லுறவு நீடித்தல்.

வியாபார வருமானத்தையே பெரிதும் நம்பியிருக்கும் ஏழை காஷ்மீரம் இந்திய டொமினியனில் சேர்வதே சிறந்த வழி. அதனால் அதற்கு லாபமும் உண்டு. அவ்விதம் அது செய்ய தவறிவிட்டது.

இரண்டாவது வழியை மேற்கொண்டு பாகிஸ்தானுடன் தற்காலீக ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. அதற்குப் பிறகு காஷ்மீரை பலவந்தமாக பாகிஸ்தானில் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் நடந்தன. ஜம்மு ரயில் பாதை மூடப்பட்டது. காஷ்மீருக்குப் போகவேண்டிய உப்பு, கோதுமை, எண்ணெய் முதலிய சாமான்களெல்லாம் ராவல்பிண்டியில் தடுத்து நிறுத்தப்பட்டன. பல துறைகளிலும் நிர்ப்பந்திக்கப்பட்டதால் காஷ்மீர்-பாகிஸ்தான் உறவு பாதிக்கப்பட்டது.

அச்சமயம் சிறையிலிருந்த காஷ்மீர் நேஷனல் கான்பரன்ஸ் லீடர் ஷேக் முகம்மது அப்துல்லா 1947 அக்டோபரில் விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலையால் பாகிஸ்தான் லீடர்கள் நடுங்கினர். உடனே ஸ்ரீநகரை ஆக்ரமிக்க திட்டம்போட்டு மலைஜாதியார் திரைமறைவில் காஷ்மீர்மீது படையெடுக்கப்பட்டது.

காஷ்மீரைப்போன்ற பலஹீனமான சிறிய சமஸ்தானம் பாகிஸ்தான் படையெடுப்பை சமாளிக்க முடியாது என்பது வெளிப்படை. எனவே காஷ்மீர் மகாராஜா ஷேக் முகம்மது அப்துல்லாவுடன் கலந்து ஆலோசித்து அக்டோபர் 25-ல் இந்திய யூனியனுடன் சேரத் தீர்மானித்துவிட்டார்.

சமஸ்தானங்களின் எதிர்காலத்தை அங்குள்ள மக்கள் முடிவு செய்யவேண்டும் என்பதே காங்கிரஸின் கொள்கை. அமைதி ஏற்பட்டபிறகு காஷ்மீரில் பொதுஜன வாக்கெடுக்கப்படுமென்றும் அதன் பிறகே இந்திய யூனியனில் சேர்ந்ததாகக் கருதப்படும் என்ற நிபந்தனையின்பேரிலும் இந்திய டொமினியன் அதற்கு சம்மதித்தது.

யூனியன் துருப்புக்கள் காஷ்மீருக்கு அனுப்பப்பட்டன. படையெடுப்பாளருடன் கைகலப்பு ஏற்பட்ட பிறகு மலைஜாதியாரின் சாதாரண தாக்குதலல்ல என்றும் நவீனயுத்ததளவாடங்களுடன்தேர்ச்சி பெற்ற ராணுவ அதிகாரிகளின் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்ட துருப்புக்கள் பாகிஸ்தானின் இரண்டு மாகாணங்களான எல்லைப்புரம், மேற்கு பஞ்சாபிலிருந்து வந்து போரிடுவதும் அவர்களுக்கு பாகிஸ்தானில் தளங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் தெரிய வந்தது. இந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டு இந்திய துருப்புக்கள் பாகிஸ்தான் எல்லையில் புகுந்து படையெடுப்பாளரின் தளங்களைத் தாக்கியிருக்க வேண்டும். அந்நிலையில் இந்தியா பாகிஸ்தான் யுத்தம் மூண்டிருக்கும் அவ்விதம் யுத்தம் ஏற்படுவதை தவிர்க்கும் உன்னத நோக்கத்துடனேயே இந்தியா

காஷ்மீர் பிரச்னையை பாதுகாப்பு கவுன்ஸிலிடம் ஒப்படைக்க முடிவு செய்தது.

படையெடுப்பாளர் பாகிஸ்தான் வழியாக வருவதை பாகிஸ்தான் தடுக்கவேண்டும் காஷ்மீரில் உள்ள மஜோரிடியார் வெளியேற பாகிஸ்தான் தூண்ட வேண்டும். படையெடுப்பாளருக்கு பாகிஸ்தானில் தளங்களோ, சப்ளைகளோ கொடுக்கக்கூடாது என்று பாதுகாப்பு கவுன்ஸில் பாகிஸ்தானிடம் கோரவேண்டும். காஷ்மீரிலிருந்து படையெடுப்பாளர் வெளியேற்றப்பட பாகிஸ்தான் இதைச் செய்யவில்லையேல் இந்திய துருப்புக்கள் பாகிஸ்தான் எல்லையில் புகுந்து படையெடுப்பாளரின் தளங்களைத் தாக்கவேண்டியிருக்கும். பாகிஸ்தானிடமிருந்து அவர்களுக்கு கிடைக்கும் வழியைத் தடுக்க இது ஒன்றேதான் முடியும். சர்வதேச சட்டப்படியும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் சார்ட்டர் படியும் அப்படிச் செய்ய இந்தியாவுக்கு உரிமை உண்டு. இப்பிரச்னை பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா சமர்ப்பிப்பதனுல் அந்த உரிமையை இழந்துவிடவில்லை இறுதி முயற்சியாக இந்தியா நிச்சயம் அதை செய்தே தீரும். பிரச்னையைத் தீர்ப்பதில் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திற்கு உதவியாக இருக்கவே இந்தியா அதை நிறுத்தி வைத்திருக்கிறது.

ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தினிடம் இந்திய சர்க்கார் சமர்ப்பித்த புகார் இதுவேயாகும் படையெடுப்பாளர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்பதே இந்தியா கோருகிறது. குற்றத்தை மறைக்க பாகிஸ்தான் சம்மந்தமற்ற பிரச்னைகளைக் கிளப்பிக்கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட பிரச்னையின் விவாத எல்லைகள் விஸ்தரித்துக்கொண்டு போகின்றன ஜம்மு காஷ்மீர் பிரச்னையுடன் இந்தியா - பாகிஸ்தான் இதர தகராறுகளும்போட்டு குழப்பப்படுகின்றன.

இந்தியா - பாகிஸ்தானிடையே ஏற்பட்டுள்ள தகராறுகளுடன் காஷ்மீரப் பிரச்னை சம்பந்தப் பட்டிருக்கிறதென்றும், எனவே இரண்டு நாடுகளிடையே இருக்கும் தகராறுகள் அனைத்தையும் பாதுகாப்பு கௌன்ஸில் தீர்த்துவைக்கவேண்டுமென்றும் சில மெம்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

முக்கிய பிரச்னையை தட்டிக்கழிக்க சம்மந்தமற்ற விஷயங்களை புகுத்தி பாகிஸ்தான் பிரதிநிதி ஸர். ஜபருல்லா குழப்பினர். டொமினியன் முஸ்லிம்களுடன் இந்திய சர்க்காரின் போக்கு, 55-கோடி ரூபாய் பற்றிய விஷயம், ஜுனகட் பிரச்னை, போதாக்குறைக்கு மஹாத்மாஜி அனுஷ்டித்த உண்ணு விரதத்தை தவறான முறையில் எடுத்துக்காட்டவும் ஸர். ஜபருல்லா முயற்சித்தார்.

இந்தியாவின் புகாருக்கு நேரடியாக பதில் கொடுப்பதைவிட்டு இந்தியா மீது பல புகார் சொல்லி தாக்க ஆரம்பித்தால் அதை வைத்துக்கொண்டு பாதுகாப்பு கௌன்ஸிலும் பிரச்னைக்கு சம்பந்தமில்லாத அப்துல்லா ஆட்சியின் தன்மை, பொதுஜன வாக்கெடுப்பு, அன்னிய துருப்புக்களின் வெளியேற்றம், போன்ற பிரச்னைகளை கிளப்பி விவாதிக்க முற்பட்டிருக்கிறது. இந்தியா படையெடுப்பாளரை வெளியேற்ற வேண்டும் என்று கோரிய முக்கிய பிரச்னையை கவுன்ஸில் தொட்டுப்பார்க்கவும் இல்லை. பல்வேறு நாடுகளிடையே ஏற்படும் யுத்தங்களை தவிர்த்து உலக சமாதானம், அமைதியை காக்கும் உயரிய லட்சியங்களுக்காகவே ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் அமைந்தது. இதர நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்ற ஆதிக்கவேட்டை இந்த ஸ்தாபனத்தில் எப்பொழுது புகுந்தது என்று தெரியவில்லை. இதில் அங்கம் வகிக்கும் தேசங்களின் தனிப்பட்ட சுதந்திரமே இந்த ஸ்தாபனத்தின் அஸ்திவாரமாகும் சொந்த பிரச்னைகளிலே இதே மாதிரி தலையிட ஆரம்பித்தால் எந்த நாடும் அதில் அங்கம் வகிக்க விரும்ப முடியாது. அதனுல் ஸ்தாபனமே குலைந்துபோக நேரிடும்.

காஷ்மீரில் மிகப்பெரிய அரசியல் ஸ்தாபனத்தில் ஒத்துழைப்பும், மகாராஜாவின் சம்மதமும் பெற்றிருக்கும் அப்துல்லாவுக்கு ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் நற்சாட்சி பத்திரம் ஒன்றும் தேவையில்லை.

பொதுஜன ஓட்டெடுப்பு சம்பந்தப்பட்ட பிரச்னை காஷ்மீரின் சொந்த பிரச்னையாகும். அதில் யாரும் தலையிடுவது சரியல்ல உரிமையும் இல்லை.

இந்தியாவில் ஆங்கில ஆட்சி இருந்துவர எப்பொழுதாகிலும் பொதுஜனவாக்கெடுப்பு நடத்தியாக வேண்டுமென்று கோர ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்திற்கு துணிச்சல் ஏற்பட்டதுண்டா?

கிரீஸ், இந்தோனேஷ்யா, இந்தோ-சீன முதலிய நாடுகளில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்று சொல்ல அதற்கு தைரியமுண்டா?
உண்மையில் இந்தஸ்தாபனத்தின்மீதுபிரிட்டிஷ்-அமெரிக்க ஆதரவாளர்கள் ஆதிக்கம் பெற்றிருக்கின்றனர். காஷ்மீர் பிரச்னை பாதுகாப்பு கௌன்ஸிலில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பே பொறுப்பு வாய்ந்த பிரிட்டிஷ் பத்திரிகைகள் காஷ்மீர் பிரிவினை திட்டங்களை பிரசுரிக்க ஆரம்பித்துவிட்டன.

வெளியேறிய பிரிட்டிஷார் இந்திய உபகண்டத்தின்மீது எவ்விதத்திலும் தங்கள் ஆதிக்கத்தை சாத்தியமான அளவுக்கு வைத்திருக்க முயற்சிக்கின்றனர்.

அமெரிக்காவோவென்றல் ரஷ்யாவுடன் மல்லுக்கு நிற்கிறது. இங்கிலேயில் மத்தியதரைக்கடலில்

டார்னல்ஸுக்கு உள்ள முக்கியத்தும் காஷ்மீருக்கும், குறிப்பாக கில்கிட்டுக்கும் உண்டு.

காஷ்மீர், கில்கிட்டு போன்ற கேந்திர ஸ்தானங்கள் சுதந்தர நோக்கமுள்ள-பலம் வாய்ந்த இந்தியாவிடம் இருப்பதை அமெரிக்கா, பிரிட்டன் விரும்ப முடியாது. பாகிஸ்தானிடம் இருந்தால் எப்படி வேண்டுமானாலும் உபயோகித்துக்கொள்ளலாம் என்று அவர்கள் நம்ப நியாயமுண்டு.

பாலஸ்தீனப் பிரச்னையில் பாதுகாப்பு கவுன்ஸிலின் நேர்மையை பார்த்தாய்விட்டது. தகராரைத் தீர்க்க பிரிவினையைத் தவிர வேறு திட்டம் அதனிடம் இல்லை. பிரிவினை தீர்மானத்தை நிறைவேற்ற முடியுமேயொழிய அதை நடத்திவைக்க அதற்கு அதிகாரம் இல்லை என்பதும் பாலஸ்தீனப் பிரச்னைக்குப் பிறகு தெளிவாய்விட்டது.

காஷ்மீர் பிரச்னையை பாதுகாப்புக் கவுன்ஸிலிடம் சமர்ப்பித்திருக்கக்கூடாது. ஆசியா சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் நியாயத்தை அதனிடம் எதிர்பார்ப்பது தவறு.

சமாதானமான முறையில் பிரச்னை தீர்க்கப்பட பாதுகாப்பு கவுன்ஸிலில் புகார் சமர்ப்பித்து இந்தியா நேர்மையையும், சமாதானத்தில் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்டி விட்டது என்பதில் சந்தேகமில்லை.

பாகிஸ்தான் செய்ததைப்போல் சாதாரண உடையில் துருப்புகளை அனுப்பி யுத்த தளவாடங்களையும் அளித்திருக்க இந்தியாவால் முடியும். ஆனால் அவ்விதம் செய்யவில்லை.

அன்னிய துருப்புகள் வெளியேற வேண்டும் என்று பாதுகாப்பு கவுன்ஸில் அபிப்பிராயப்பட்டால் சாதாரணஉடையில் காஷ்மீரில் இருக்கும் படையெடுப்பாளரை அது கட்டுப்படுத்தாது

காஷ்மீரிகள் யார்? அல்லாதார் யார்? என்று தீர்மானிப்பது முடியாத காரியம். எனவே தில்லுமல்லுகளுக்கு அதே தோரணையில் பதிலளிக்க இந்தியாவும் விரும்பினால் தான் துருப்புக்களையும் சாதாரண உடையில் காஷ்மீரில் வைத்திருக்க முடியும். அவ்விதம் செய்ய இந்தியாவுக்கு அவசியமில்லை என்பது வாஸ்தவம்தான்.

ஓட்டெடுக்க பாதுகாப்பு கவுன்ஸில் அபிப்பிராயப்படுவதில் நேர்மை இல்லை. படை எடுப்பாளர் வசம் கில்கிட். பூஞ்ச், முஸப்பர், ஆபாத் முதலிய இடங்கள் இருக்கின்றன. ஓட்டெடுக்கப்பட்டால் அங்குள்ள பிடாரிகளும் சேர்ந்து பாகிஸ்தானுக்கே ஓட்டுபோடுவார்கள். ஷேக் அப்துல்லாவின் ஆட்சியில் இருக்கும் யூனியன் துருப்புகள் உள்ள பிரதேசங்கள் நிச்சயமாக இந்தியாவுக்கே ஓட்டு செய்யும். காஷ்மீர் தானுகவே பிரிந்து வெள்ளையர்களின் கனவு நினவாகிவிடும். இந்தியா தாக்கல் செய்த புகாரைப் பரிசீலித்து படையெடுப்புக்கும் பாகிஸ்தானுக்கும் சம்மந்தமுண்டா? இல்லையா? என்று முடிவுசெய்து தக்க நடவடிக்கை எடுப்பதுதான் கவுன்ஸிலின் கடமை. அதை விட்டு தெளிவான பிரச்னையை வளர்த்திக்கொண்டுபோவதும் மேலும் சிக்கல்களை உண்டு பண்ணுவதும் எதற்காக? என்பது விளங்கவில்லை.

இந்திய டொமினியன் தன்னுடைய நிலையை உலகுக்கு எடுத்துக்காட்டிவிட்டது. இந்தியா யுத்தத்தை விரும்பவில்லை என்றும் சமாதானத்தையே நாடுகிறதென்றும், நேசப் பான்மையுடன் நடந்துகொள்ள விரும்புகிறதென்றும் உலகுக்கு அறிவித்தும் ஆயிற்று.

சமாதானமாகவும் சரி, யுத்தமே செய்யவேண்டியிருப்பினும் சரி, காஷ்மீருக்காக எந்த விலை கொடுக்கவும் இந்தியா தயாராக இருக்கவேண்டும். அதை தவிற வேறு வழியில்லை. காஷ்மீரில் கடைசி கொள்ளைக்காரன் பாக்கியிருக்கும் வரையில் இந்திய துருப்புகளிலிருந்து ஒரு சிப்பாயையும் வாபஸ் வாங்குவதில்லை என்று அறிவித்துவிடவேண்டும். பாகிஸ்தானிலுள்ள கொள்ளைக்காரர்களின் தளங்களை தவிடு பொடியாக்க விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தவேண்டும். அதன் பயனுக யுத்தம் மூளும் என்பது நிச்சயம்.

இன்று காஷ்மீரில்நடப்பதும் யுத்தம்தான் திரை மறைவில் இருந்துகொண்டு திகிடுதத்தங்கள் செய்துகொண்டிருக்கும் கோழைகள் நேருக்குநேர்வரும்படி செய்து புத்தி புகட்ட இந்தியா முன்வரவேண்டும். இந்தியா யுத்தத்தை விரும்பவில்லை. பாகிஸ்தான் விரும்புவது யுத்தமே என்றால் அதற்கு இந்தியா தயார் என்று உலகுக்கு அறிவிக்கும் காலம் சமீபித்துக்கொண்டிருக்கிறது.

மேலப்பாளையம்

டவுன் காங்கிரஸ் கமிட்டி ஏற்பாட்டின்படி ஒரு மைல் நீள மௌன ஊர்வலம் நத்தத்திலிருந்து புறப்பட்டு தாம்பரபரணி நதிக்கரை அடைந்து ஜனப் V. S T. முஹம்மது இப்ருஹீம் தலைமையில் பிரார்த்தனை, திருகுர்ஆன் ஓதி, ராம பஜனையுடன் கூட்டம் நடந்தது.

M. K. காதர் முஹையத்தீன்,
காரியதரிசி.

வகுப்புவாதம் தொலையுமா?

மகாத்மா காந்திஜீ வகுப்பு வாதத்துக்கு பலி ஆய் விட்டார். வகுப்புவாதிகளின் நீசத்தனமான நடவடிக்கைகளால் தேசியப் பற்றுள்ள மந்திரிகளுக்கு இனி என்ன நேரும் என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. அவர்களை மட்டந்தட்டவில்லை யென்றால் தேசிய சர்க்காருக்கு எத்தனை இடைஞ்சல்கள் ஏற்படுமென்றும் தெரியவில்லை. எனவே இனி இந்தியாவில் வகுப்புவாதிகளின் வருங்காலம் என்ன என்பதுதான் இன்று இந்தியாவை எதிர்நோக்கியுள்ள மிக முக்கிய பிரச்னை.

இதர விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் இருப்பினும் வகுப்புவாதத்தை மட்டந் தட்டும் பிரச்னை சம்பந்தப்பட்டவரை, ஸர்தார் பலதேவ் சிங்கு டாக்டர் முக்கர்ஜீ உள்பட மந்திரிகள் அனைவரும் ஒன்றுபட்ட அபிப்பிராயம் கொண்டிருப்பர் என்பதில் சந்தேகமில்லை.

மந்திரிகள் அனைவரும் ஒத்துழைக்க தயாராய் இருக்கையில், நெருக்கடியான இச்சமயத்தில் மதத்தின் பெயரால் கலகங்களைத் தூண்டி பொதுமக்களை வேட்டையாடும் சுயநலக்காரர்களை விட்டுவைத்தால் அது சர்க்காரின் பலஹீனமாகவே கருதப்படும். பலமான நடவடிக்கைகள் தைரியமாக எடுத்து, ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்களிடையே நிலவிவரும் வகுப்புவாதத்தின் கருவறுக்க சர்க்கார் முன்வரவேண்டும்.

கோயில்கள், மசூதிகள், குருத்துவார்க்களைவிட்டு வெளியில் மதத்தைக் கொண்டுவந்து பொது விஷயங்களில் புகுத்தி சமுதாய ஐக்கியத்துக்கு தீங்கு செய்யும் நபர்களை துரோகிகளுக்கு அளிக்கப்படும் கடைசி தண்டனையை அளிக்கவேண்டும்.

மஹாத்மாவின் மறைவால் ஏற்பட்டிருக்கும் புரட்சிகரமான மன மாறுதலை சரியான துறையில் பிரயோஜனப்படுத்திக் கொண்டு மத்திய, மாகாண சர்க்கார்கள் முஸ்லிம் லீக், ஹிந்துமஹாசபை போன்ற மத, சமூக வேற்றுமைகளை பொதுவாழ்வில் புகுத்தும் அத்தனை ஸ்தாபனங்களையும் சட்டவிரோதமானவை என்று அறிவிக்க வேண்டிய உகந்த சந்தர்ப்பத்தை இழக்காமல் இருக்குமாக!

—: கடிதங்கள். :—

அமரர் மகாத்மாவுக்கு அஞ்சலி

12—2—48.

கும்பகோணம்

ஸ்ரீ ராமா ஆரம்ப பாடசாலையில், மஹாத்மா ஞாபகார்த்தமாக, “உண்மை, அஹிம்சை, சேவை, மனோபாவத்துடன் மக்களிடையே பரஸ்பரம் அன்பு, நல்லெண்ணம், சகிப்புத்தன்மை, நிலவ ஆயுள் முழுதும் உழைப்பேன்” என்னும் கருத்து அடங்கிய மஹாத்மாவின் திரு உருவப்படத்துடன் கூடிய உறுதிமொழிப் பத்திரங்கள் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டன. அடியில் கையொப்பம் போட்டு கண்ணாடியிட்டு குழந்தைகள் படிக்குமிடத்திற்கு முன் அதை தொங்கவிட்டிருக்கின்றனர் என்று மானேஜர் R. இராமாமிருதாச்சாரியார் அறிவிக்கிறார்.

நச்சாந்துப்பட்டி.

திரு சுப. சோமசுந்திரம் செட்டியார் தலைமையில் நடந்த அஞ்சலி கூட்டத்தில் முரு. இராமனாதன், வீர. கிருஷ்ணன், சுப, குமரப்பன், பீர். முகம்மது முதலியோர் மஹாத்மாவை குறித்துப்பேசினர், மறுநாள் 13-ந் தேதி பிர்மாண்டமான ஊர்வலத்துடன் நேத்தாஜி மைதானத்தை அடைந்து, பெரி. சுப. இராமசாமி செட்டியார் தலைமையில் ஹக்கீம் சகோதார் அப்துல் கையூம் நீண்ட நேரம் மஹாத்மா சாதித்ததையும், நமக்காக விட்டுச்சென்ற நிர்மாண திட்டத்தையும் விளக்கமாகப் பேசி முடிவில் கொடியேற்றிவைத்தார்.

முரு. ராமனாதன்,
காரியதரிசி.

ஆலூர்

காலை 8-மணிக்கு போர்டு ஆண் பாடசாலையில் சர்வமத வேத பாராயணம், நூற்பு யக்ஞம் நடந்தது, ஹிந்து, முஸ்லிம்கள் மௌன ஊர்வலம் வந்து மாலையில் டாக்டர் L. T. அப்பாதுரை தலைமையின் கீழ் பல ஹிந்து முஸ்லிம் அன்பர்கள் மகாத்மாஜீயின் அரிய உபதேசங்களை செயலில் காட்டவேண்டும் என்று ஜனங்களைக்கேட்டுக்கொண்டார். அண்ணலின் ஞாபகார்த்தமாக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்க நிதி வசூலிக்கவும் வேலையைப் பூர்த்தி செய்யவும் 30 பேர்கள் கொண்ட கமிட்டி ஒன்று நிறுவிக்கப்பட்டது. பிரார்த்தனையுடன் கூட்டம் கலைந்தது.

பாபநாசம்

மஹாத்மாவின் அஸ்தியைக் கொண்டுவந்த ரயிலி லிருந்து பெற்ற மாலையுடன் ஏராளமான ஜனங்கள் ஊர்வலமாக திருமலைராஜன் ஆற்றை அடைந்து பகல் 12 மணிக்கு கீதை பாராயணத்துடன் மாலையை ஜலத்தில் சேர்ப்பித்து அனைவரும் ஸ்னானம் செய்தனர். மாலையில் படஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடந்தது. T. V. சேஷய்யர் தலைமை வகித்தார். வெங்கட்ராமய்யர் M. L. A., "ஆஸாத்" ஆசிரியர் மௌலானா அப்துல் ஹகீம் மற்றவர்களும் மஹாத்மாவைப் பற்றி பேசினார்கள். ஸ்ரீ நரசிம்மலு நாயுடு வந்தனங் கூற பிரார்த்தனையுடன் கூட்டம் முடிவடைந்தது. மறுநாள் பாபநாசம் வர்த்தக சங்கத்தார் சார்பில் 1500 ஏழைகளுக்கு அன்னதானம் நடந்தது.

ஜவ்வாதுபட்டிபுதூர்
12—2—48

இன்று மாலை S. அப்துல் ரஹீம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் உலக உத்தமரின் மறைவுக்கு வருந்தியும், கொலை செய்த அடாச்செய்கையை கண்டித்தும், அன்பு சாகரம், கருணைக் கடல், சுதந்திர இந்தியாவின் வயோதிக வீரரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்னாரின் ஞாபகார்த்தமாக நூற்பு கழகம் ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அதே கூட்டத்தில் ஆஸாத் தேசிய முஸ்லிம் வாலிப சங்கம் அமைக்கப்பட்டு S. முஹம்மது இஸ்மாயில் தலைவர், S. அப்துல் ரஹீம் உபதலைவர், S. K. முஹையத்தீன் காரியதரிசி, M. வெள்ளையப்பா பொக்கிஷ தாரராகவும் 14 அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டியும் அமைக்கப்பட்டது.

S. K. முஹையத்தீன்
காரியதரிசி,
ஆஸாத் தேசிய முஸ்லிம் வாலிப சங்கம்.

சிங்கம்புணரி

இவ்வூர் வாசிகளால் 31—1—48-லிருந்து தினமும் விரிசிலை நதியில் மஹாத்மாவுக்காக பிரார்த்தனை நடந்துவந்தது. கடைசி தினத்தன்று அஸ்தி பாண்டத்துக்கு மக்கள் புஷ்பாஞ்சலி செய்தனர். மாலையில் 5000 பேருக்கு மேல் கூடி ஊர்வலமாய் ஆற்றங்கரை அடைந்து சர்வமத வேத பாராயணம், ராமபஜனையுடன் அஸ்தி கரைப்பு சடங்கை நிறைவேற்றினர்.

ஆ. வெ. முத்துக்கருப்பன்,
காரியதரிசி.
கிராம காங்கிரஸ் கமிட்டி.

நெல்லிகுப்பம்

வாலிப முஸ்லிம் சங்க சார்பில் நெல்லிகுப்பம் கான்சாகிப் மார்க்கெட்டில் தேவநாயகம் பிள்ளை தலைமையின் கீழ் அனுதாபக்கூட்டம் ஒன்று நடந்தது 'ஆஸாத்' ஆசிரியரான அப்துல் ஹக்கீம் மகாத்மாவைக் குறித்து நீண்ட நேரம் பேசினார். அ. இ. கா. க. மெம்பர் நெல்லிக்குப்பம் ஷரீப் வந்தனோபசாரம் கூறினார். ஏராளமாக ஹிந்து, முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். ஷரீப்

முள்ளங்குடி

மாலை கொள்ளிடக்கரையிலிருந்து மோட்டாரில் மகாத்மா பட ஊர்வலம் திரளான ஹிந்து முஸ்லிம்களுடன் நடைபெற்றது. இரவு S. V. கோபால்சாமி செட்டியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் S. S. குழந்தைவேல் செட்டியார், M. S. வைத்தினாதம் பிள்ளை அண்ணலின் அஹிம்சா சேவையைக் குறித்து பேசினர். S K. தனபாலன் நன்றி கூறினர்.

S. N. சிங்காரம்.

விராச்சிலை.

கிராம காங்கிரஸ் கமிட்டி சார்பில் அஞ்சலி கூட்டம் ஒன்று நடந்தது. ஹக்கீம் சகோதரர் அப்துல் கய்யூம் பேசினர். ஆண்டியப்பனம்பலம் தலைமையில் 200-க்கு மேற்பட்ட ஹரிஜனங்கள் இங்குள்ள முக்கிய ஆலயங்களில் சிறப்பாக பிரவேசம் செய்தனர்.

R. நடராஜன்
காரியதரிசி.

கல்லல்.

ஸ்ரீமான் வே. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை தலைமையில் இவ்வூர் காந்தி மைதானத்தில் பிரார்த்தனை சர்வமத வேதபாராயணத்திற்குப்பிறகு பொதுக்கூட்டம் நடந்தது. ஒன்பது வயதுள்ள சிறுமி, M. வள்ளியம்மை, கதிசுந்தரம், க. சொ. ஆதப்பா, முதலியோர் பேசினார்கள். முப்பதாயிரம் ரூபாய் செலவில் மஹாத்மா காந்தி ஞாபகார்த்தமாக மண்டபம், சுகாதார நிலயம், நிறுவி, அண்ணலின் உருவச்சிலை ஸ்தாபிப்பதென்றும், தீர்மானிக்கப்பட்டது. அன்றுகாலை ராமேஸ்வரம் சென்ற அண்ணலின் அஸ்தியை பல்லாயிரக்கணக்கில் மக்கள் தரிசித்தனர்.

K- சொக்கலிங்கம்,
கிராம காங்கிரஸ் கமிட்டி, காரியதரிசி.

திருக்கருகாவூர்.

காலை 11-மணிக்கு புஷ்ப விமானத்தில் மஹாத்மா பட ஊர்வலம் வந்து மாலை 5-மணிக்கு வெட்டாற்றங்கரையில் பொதுக்கூட்டம் நடந்தது. K. துரைஸாமி அய்யர் தலைமைவகித்தார். பண்டாரவாடை மௌலானா கூ. அ. அப்துல் மஜீது, மருதமுத்துதென் கொண்டார், T. V. சேஷய்யர் முதலியோர் பேசினர்

T. S. ரெங்கநாதன்.

உண்மையான பக்கிர்.

மகாத்மாவுக்கு இப்பி பக்கிரி அஞ்சலி.

பெஷாவர் (தபால் மூலம்)

இப்பி பக்கிரி தன்னைச்சேர்ந்தவர்களுக்கு காஷ்மீர் தாக்குதலில் கலந்து கொள்ள வேண்டாமென கண்டிப்பாக அறிவித்து விட்டதாக தகவல் கிடைத்திருக்கிறது.

மஹாத்மா மறைவுக்கு நடந்த அனுதாபக் கூட்டத்தில் இப்பி பக்கிரி கீழ் வருமாறு பேசினர்.

"அவர் ஒரு உண்மையான பக்கீர். கலீபா, உமர் போல் எளிய வாழ்க்கையை நடத்தினர். மக்களுக்கு நேர்மை, சத்தியத்தை போதித்தார். மோசடி செய்து விட்டு தலைவர்களெல்லாம் ஒடிமறைந்த சமயத்திலும் இந்திய முஸல்மான்களை காப்பாற்றினர். அதற்காகவே உயிரையும் அர்ப்பணித்துவிட்டார்."

"வீர சொர்க்கவாசி மஹாத்மாவின் ஞாபகார்த்தமாக சுதந்திர பட்டாணிஸ்தானில் ஒரு சத்திரமும், ஆஸ்பத்திரியும் நிர்மாணிப்போம்."

எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான் மூலம் இப்பி பக்கிரிக்கு சில மாதங்களுக்கு முன் மஹாத்மா அனுப்பிய உருது கடிதமும் 'மலங்க் பாபா' என்று மகுடமிட்ட மஹாத்மாவின் திரு உருவப்படமும் அவர் வசிக்கும் குகை வாயிலில் தொங்கவிடப்பட்டன. பட்டாணிய ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் மஹாத்மா படத்திற்கு சலாம் செய்து வேட்டுகளை கிளப்பி மரியாதை செலுத்தினர். முடிவில் அனைவரும் சேர்ந்து பயபக்தியுடன் முஸ்லிம் சம்பிரதாயப்படி மஹாத்மா ஜனஸா தொழுகையும் தொழுதார்கள்.

பட்டாணியர்களே ஜாக்கிரதை.

காஷ்மீர் தாக்குதலை குறித்து பேசுகையில் "காஷ்மீர் தாக்குதல் 'ஜிஹாத்' அல்ல. முதலாவதாக காஷ்மீரில் எதிர்த்து நிற்பவர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள். முஸ்லிம்களை தாக்குவது 'ஜிஹாத்' அல்ல. இரண்டாவதாக காஷ்மீர தாக்குதலின் லட்சியம் புனிதமானதல்ல, எனவே அதை மத யுத்தம் என்பதற்கில்லை"

"இஸ்லாம் என்றும் ஜிஹாத் என்றும் பாகிஸ்தானிகள் பட்டாணியர்களை ஆயுதமாக உபயோகிக்கின்றனர். பாகிஸ்தான் தகிடுதத்தக்காரர்களிடம் பட்டாணியர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பாகிஸ்தானிகளுக்கு உண்மையாகவே முஸ்லிம்களைப் பற்றி கவலை இருந்திருந்தால், இந்திய நாலரை கோடி முஸ்லிம்கள் பாதுகாப்புடன், அமைதியாக இருக்க வசதி செய்யும் முறையில், இந்திய டொமினியனுடன் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியிருக்க வேண்டும். இந்திய முஸல்மான்களுக்கு காஷ்மீர் தாக்குதலால் எவ்விதத்திலும் உதவமுடியாது."

"காஷ்மீரில் கொள்ளை யடித்து, மைனரிட்டி சமூகத்தினருக்கு தீங்கிழைத்த கோழைகள், பட்டாணியர்களின் பிரகாசமான பெயருக்கே பங்கம் விளைவித்துள்ளனர். முஸ்லிம் அல்லாதாரை தாக்கி இந்திய முஸல்மான்களை துன்பங்களுக்கு ஆளாக்கியிருக்கின்றனர்"

முஸ்லிம்களை அடக்கியாள வந்த நபர்.

"இஸ்லாமிய சரித்திரத்திலேயே இஸ்லாமுக்கும், முஸ்லிம்களுக்கும் மிஸ்டர் ஜின்னாவைவிட அதிகமாக யாரும் தீங்கிழைத்ததில்லை. "ஆபத்திலிருக்கும் மைனரிடி முஸ்லிம்கள் ஹிந்து ராஜ்யத்தில் அகப்பட்டுக் கொள்ள நான் விடமாட்டேன்." என்று பத்து வருஷங்களாக கூச்சல் போட்டுவந்த நபர், இன்று மெஜாரிடி முஸ்லிம்களை அடக்கியாள மைனரிடி முஸ்லிம்களை நிராதரவாகவிட்டு ஓடிவந்துவிட்டான் "பின் தங்கிவிட்ட இந்திய முஸல்மான்களை காப்பாற்ற பாடு படுகிறோம்" என்று சொல்லிக் கொண்டிருந்த குட்டி காய்தே ஆஜம்களும் ஒடிவந்து இன்று கராச்சி பங்களாக்களின் சுகபோகங்களில் மூழ்கியிருக்கின்றனர்"

"இப்பேர்ப்பட்ட லீக் லீடர்கள் இந்திய முஸல்மான்கள் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்து, பாகிஸ்தான் முஸ்லிம்களை காப்பாற்றி விட்டதாக இன்று சொல்லிவருகின்றனர்" "லீகர்கள் பாகிஸ்தானை உருவாக்கவில்லை. வெள்ளைப் பரங்கிகளே ஏற்படுத்தினர். லீகர்களே உருவாக்கினர்கள் என்று வைத்துக்கொண்டாலும், முஸ்லிம்களுக்கு நன்மை பயக்கக் கூடிய காரியம் ஒன்றும் அவர்கள் சாதித்து விடவில்லை. பாகிஸ்தான் ஏற்படுதற்கு முன்னும் அங்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவே இருந்தனர் எவ்வித ஆபத்தும் அவர்களுக்கு இருக்கவில்லை மாகாண சர்க்கார்களும் அவர்களிடமே இருந்தன.

முஸ்லிம்கள் பெரும்பான்மை பிரதேசங்களே பாகிஸ்தான் என்ருல், முதலிலிருந்தே அவை பாகிஸ்தானுகவே இருந்தன உண்மையில் முஸ்லிம் லீக், இன்று அப்பிரதேசங்களை, இன்னும் குறுக்கிக் கொண்டு விட்டது.''

''மைனுரிடி முஸ்லிம்களை காப்பாற்றவேண்டும் என்றே அவர்கள் கூச்சல் போட்டுவந்தனர் பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு சிறுபான்மை முஸ்லிம்களின் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது''

முஸ்லிமா ? இல்லையா ?

''இஸ்லாமிய ராஜ்யம் அமைக்க விரும்புவதாகவும், இப்பி பக்கிரி இஸ்லாமுக்கும், பாகிஸ்தானுக்கும் விரோதி என்றும், மிஸ்டர் ஜின்னுவும், பாகிஸ்தான் லீடர்களும் சொல்லுகின்றனர். முதல்தர இஸ்லாமிய விரோதிகள் அவர்களே என்று நான் சொல்லுகிறேன்.''

''இஸ்லாமென்றும், இஸ்லாமிய ராஜ்யமென்றும் வாயால் சொல்லிக்கொண்டிருக்கும் அவர்களுடைய நடத்தை வெள்ளை காபிர்களைக் காட்டிலும் படுமோசமாகவே இருக்கிறது. இஸ்லாமிய ராஜ்யம் பிறகு அமைக்கலாம். முதலில் நீங்கள் உண்மை முஸ்லிம்களாக மாறுங்கள் என்றுதான் அவர்களுக்கு நான் சொல்லுகிறேன்.''

''உங்களுடைய ஆடம்பரமும், அகம்பாவமும் நடத்தையும் இஸ்லாமுக்கு நேர் விரோதமானது, லீக்கில் எல்லோரையும்விட பெரிய மனிதனின் நடத்தையும் இஸ்லாமிய விரோதமும் பார்க்கும்போது இப்பேர்ப்பட்ட ஒரு மனிதன் முஸ்லிமாக எப்படி இருக்கமுடியும் என்று நான் சந்தேகிக்காமல் இருப்பதற்கில்லை''

சேவக் சங்கமும், சமஸ்தாதிபதிகளும்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்த பிறகு தலைவர்களையும், பொதுமக்களையும் கொன்றதாக, அல்லது கொலைகாரர்களுடன் தடர்பு கொண்டிருந்ததாக சமஸ்தானுதிபதிகளின்மீது குற்றம் சாட்டப்படுவது இதுவே முதல் தடவை.

இந்த குற்றச்சாட்டின்கீழ் ஆள்வார் மகாராஜா பிரஷ்டம் செய்யப்பட்டு, அவருடைய பிரதம மந்திரி டாக்டர் கரே டில்லியில் காவலில் வைக்கப்பட்டிருக்கிருர்.

ஆள்வார் மகாராஜர்வும் அவருடைய பிரதம மந்திரியும் உள்ளபடியே குற்றவாளிகள் தானு? இல்லையா? என்று இப்பொழுது சொல்லமுடியாவிட்டாலும், ஆங்கிலேயர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறிய பிறகு, சமஸ்தான நிர்வாகம் பொதுமக்கள் கைக்கு மாற்றப்பட வேண்டும் என்ற பிரச்னை தலைதூக்கியவுடன், எல்லா நவாப்புகளும், ராஜாக்களும் அடிபட்ட விரியன்களைப்போல் நெளிய ஆரம்பித்திருந்தனர்.

எது எப்படிப் போனுலும் அவர்களுடைய சர்வாதிகாரத்துக்கு எவ்வித ஆபத்துமின்றி நீடித்திருக்க வேண்டும் என்பதே அவர்களுடைய முயற்சி. அதற்காக சிலர் பாகிஸ்தானுடன் சேர்ந்து உள்ளுக்குள்ளேயே சதி செய்கின்றனர். சிலர் சேவக் சங்கத்தின் உதவியை நாடுகின்றனர். சிலர் இன்று சர்க்காரில் இருக்கும் மந்திரிகளை தாஜா செய்து காக்கா பிடித்து தங்களை பத்திரப்படுத்திக் கொள்ளப் பார்க்கின்றனர்.

இன்று ஆள்வார் மகாராஜா தாற்காலிகமாய் பிரஷ்டம் செய்யப்பட்டிருக்கிருர். இந்த தாற்காலிக பிரஷ்ட உத்திரவே எதிர்காலத்தில் ஆயுள் தண்டனையாகவோ, தூக்குமேடையாகவோ கூட மாறலாம். அதைக் குறித்து முன் கூட்டிச் சொல்வதற்கில்லை.

ஆங்கிலேயர்கள் தங்கள் சக்தி குன்ருமல் இருக்க சமஸ்தானுதிபதிகளின் அக்ரமங்களுக்கு திரைபோட்டு மூடிவைத்திருந்த காலம் மலையேறிவிட்டது இன்றிருப்பது தேசிய சர்க்கார். பிச்சைக்காரனுயினும், மகாராஜாவாக இருப்பினும் இனி எல்லோருக்கும் ஒரே நியாயந்தான் வழங்கமுடியும்.

ஆள்வார் மகாராஜாவை பிரஷ்டம் செய்வதற்கு முன் பட்டியாலா, பிகானீர், குவாலியர் மகாராஜாக்களின் அபிப்பிராயமும் கேட்கப்பட்டது. இந்த மூன்று மகாராஜாக்களும், ஆள்வார் மகாராஜா பிரஷ்டம் செய்யப்படுவதற்கு, சம்மதித்து அபிப்பிராயம் தெரிவித்ததுதான் இதிலுள்ள விசித்திரமானதொரு விஷயம்.

மஹாத்மா மீது பிரார்த்தனை கூட்டத்தில் குண்டு வீசிய சேவக் சங்கத்தின் தத்து புத்திரனுன மதன் லால், கைது செய்யப்பட்டபிறகு, தன் கூட்டாளிகளை காட்டிக்கொடுத்துவிட்டதைப் போலவே, ஒரு ராஜாவையோ, நவாபையோ பிடித்து மிரட்டினுல் தன்னுடைய கூட்டாளி சமஸ்தானுதிபதிகளின் பெயர்களையும் கக்கிவிடலாம்.

சேவக் சங்க தலைவர்களின் போக்கைப் பார்த்தால் இவ்விதம் நம்ப இடமிருக்கிறது. ஒரு வாரத்திற்குள்ளேயே அவர்கள் அவசர அவசரமாகவே சேவக் சங்கத்திற்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அறிவித்துவிட்டனர். ஹிந்துமஹா சபை கலைக்கப்படவேண்டு மென்ற பிரச்னை வரை விவாதிக்கப்படுகிறது

எல்லோரையும்விட முதல்தர கோழைகள் சமஸ்தானுதிபதிகள் தான். மற்ற சமஸ்தானுதிபதிகளை காட்டிக் கொடுப்பது ஒருபுறமிருக்க தங்கள் பெண் சாதி, பிள்ளைகளையும்கூட காட்டிக் கொடுக்க அவர்கள் தயங்கமாட்டார்கள். பிரதம மந்திரி டாக்டர் கரேயை காட்டிக் கொடுத்து, ஆள்வார் மகாராஜா ஆரம்பித்து வைத்த காட்டிக்கொடுக்கும் படலம், எங்கு போய் முடியப்போகிறதென்று பொறுத்திருந்து பார்ப்போம்.

ஜெயப்பிரகாஷ் கர்ஜனை.

டில்லி, 2-2-48

மஹாத்மா மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க ராம்லீலா மைதானத்தில் நடந்த இரண்டரை லக்ஷம் பேர் அடங்கிய பிரம்மாண்டமான கூட்டத்தில் சோஷியலிஸ்டு தலைவர் ஜயப்பிரகாஷ் நாராயண் கீழ் வருமாறு பேசினர்.

"வாலிபத் தோழர்களே! இன்று நாட்டை துக்கம் கவ்விக் கொண்டிருக்கிறது. இந்த துக்கம் வெளியார் படையெடுப்பினுல் ஏற்பட்டதல்ல. நமக்குள்ளிருந்தே ஏற்படுத்தப்பட்டதாகும். நாமே தான் அதை அகற்றவும் முடியும். பாபூஜியின் கொலை தனி நபரின் துணிச்சலல்ல என்று நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். தனி மனிதன் அப்படி செய்யவும் முடியாது. அவனுக்கு பின்பலமாக ஒரு ஸ்தாபனமே இருக்கிறது

அவன் ஹிந்து மஹாசபைக்காரன். அதனுடைய பத்திரிகை ஒன்றின் ஆசிரியன். பாபூஜியின் கொலையுடன் சதி ஒன்றுக்கு சம்மந்தமுண்டு. அச்சதியின் ஒரு கட்டம் பூர்த்தியாகிவிட்டது. இன்னும் அவர்களுடைய நாச வேலைகள் முடிந்துவிடவில்லை என்று அவர்களே சொல்லுகின்றனர். நாளை யார்? நாளை மறுதினம்யார்? குறிவைக்கப்படுவார்கள் என்று சொல்வதற்கில்லை. அவ்வாறு நடந்துகொண்டே போனுல் பண்டித நேரு உள்பட மற்றவர்களும் தப்ப முடியாது.

நம் தலைவர்கள் ஆயுதபாணிகளல்ல சதா பொது மக்களுடன் கலந்து உறவாடுகின்றனர். போலீஸ் படையையோ ராணுவத்தையோ பாதுகாப்புக்காக வைத்துக்கொள்வதில்லை. அவர்களை பாதுகாக்க வேண்டியவர்கள் நீங்களேதான். என் மீது யாராவது வெடி குண்டு வீசுவதோ, டாக்டர் லோஹியாவை துப்பாக்கிக்கு இரையாக்குவதோ சூரத்தனமல்ல.

— பாபூஜியின் திறந்த நெஞ்சு —

பாபூஜியை சுட்டவன் சூரத்தனம் ஒன்றும் செய்துவிடவில்லை. அவருடைய மார்பு எப்பொழுதும் திறந்தே இருந்தது. எதிரிகளிடமிருந்து அவர் தன்னை பாதுகாத்துக் கொண்டிருக்கவில்லை. எதிரிகளின் துப்பாக்கிக்கும், விரோதிகளின் வாளுக்கும் அவருடைய நெஞ்சு திறந்தேயிருந்தது. பிரார்த்தனை கூட்டத்திற்கு வருபவர்களை பரிசோதிக்க வேண்டுமென்று சர்க்கார் விரும்பியபொழுதும் பாபூஜி அதை நிராகரித்துவிட்டார்.

"நான் யாருக்கும் பயப்படவில்லை. எனக்கு பாதுகாப்பு தேவையில்லை. என்னுடைய வாழ்க்கை ஆண்டவன் கையில் இருக்கிறது" என்று சொன்ன பாபூஜியை கொல்வது வீரமா? சர்தார் பகவத் சிங் ஒரு வீரன். வீரத்தை நிலைநாட்டிய சூரன். அன்று இந்த கொலைகாரர்கள் எங்கு பதுங்கிக் கொண்டிருந்தனர்? அந்த நாளில் இவர்களைக் காணவில்லை.

துரோகிகளிடமிருந்து தேசத்தை மீட்க வேண்டும்

பாபூஜியைக் கொன்ற சதிகாரர்களை ராணுவம், போலீஸைக்கொண்டு ஒடுக்கியாக வேண்டும். ஆனல் எல்லோரையும்விட அதிகப் பொருப்பு பொதுமக்களாகிய நமக்கு ஏற்பட்டிருக்கிறது. தேசத்துரோகிகள் நடமாடமுடியாத சூழ்நிலையை நாட்டில் நாம் ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கும் வகுப்புவாதிகளின் ஊர்வலங்களும், அணிவகுப்புக்களும் நடக்கின்றன. வகுப்புவாத பத்திரிகைகள் விஷத்தைக் கக்கி சூழ்நிலைய விஷமயமாக்குவதில் தேசத்துரோகிகளுடன் ஒத்துழைக்கின்றன. அம்மாதிரி பத்திரிகைகள் ஒழிக்கப்படவேண்டும் வகுப்புவாதிகளின் கூட்டங்கள், ஊர்வலங்கள், அணிவகுப்புக்கள் நிறுத்தப்பட்டு வகுப்புவாத ஸ்தாபனங்களும் கலைக்கப்படவேண்டும்.

சர்க்கார் என் கையில் இருந்தால் நான் இதைச் செய்தே தீருவேன். அந்த பத்திரிகைகளையும் ஸ்தாபனங்களையும் மட்டந் தட்டியிருப்பேன். இன்றும் ராஷ்டிரிய சுயம்சேவக்சங்க அணிவகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன பரத்பூர் மகாராஜா, ஆள்வார் மகாராஜா அதில் கலந்துகொள்கின்றனர். சுதந்திரத்திற்கு போராட காங்கிரஸ் அணிவகுத்து நின்ற போது அவர்கள் ஆங்கிலேயர்களின் பூட்ஸுகளை நக்கிக்கொண்டிருந்தனர்.

— நவ இந்திய சிற்பிகள் யார்? —

வகுப்புவாதிகளல்ல! தேசத்துரோகிகளல்ல!! பாபூஜியின் கொலைகாரர்களல்ல!!! நேருஜிமீது வெடி குண்டு வீசியவர்கள் அல்ல!!!! பாபூஜியின் தியாகமே நவ இந்தியாவை உருவாக்கிற்று. ஏழை பொது மக்கள் கொடுத்த பலியே அதை தோற்றுவித்தது. இம்மாதிரி சதிகளும், இவ்வித கூட்டங்களும், இந்த

பத்திரிகைகளும் நீடித்தால் நவ இந்தியா அழிந்து போகநேரிடும் இதற்காகத்தானா நாம் வெள்ளையர்களை வெளியேற்றி சுதந்திரத்தைப் பெற்றோம்? நம்முடைய அருமைத் தலைவரின் நெஞ்சை துப்பாக்கி குண்டுகளால் சல்லடைக் கண்ணாக துளைப்பதற்காகத்தான் நாம் சுதந்திரத்திற்குப் போராடினோமா?

நாடு விடுதலை அடைந்தபிறகு மஹாத்மாஜியை அலங்காரப் பீடத்திலே அமர்த்தி, "பாபூ! நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாம் நாட்டை முன்னேற்ற உழைப்போம். உங்கள் சிறந்த யோஜனைகளால் நமக்கு வழிகாட்டுங்கள்" என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும். ஆனால் நாம் செய்தது என்ன? இன்று பாபூஜி நம்மைவிட்டு பிரிந்துவிட்டார். நாடு பிரிந்து பாகிஸ்தான் அமைந்துவிட்டது. பாகிஸ்தான் எப்படி அமைந்தது? புரட்சியின் சங்கநாதத்தை நீங்கள் புறக்கணித்ததே அதற்குக்காரணம்.

நாம் தேசத்தில் புரட்சி சங்கநாதத்தை ஒலித்தோம். நீங்கள் செவிசாய்க்கவில்லை. இன்று போலீஸ், ராணுவம், செக்ரடரியட்டில் இருப்பவர்கள் அன்றே நம்முடைய முழக்கத்தைக் கேட்டிருந்தால் நாட்டிலே புரட்சி நடந்தேறியிருக்கும். பாகிஸ்தான் ஏற்பட்டிருக்க முடியாது. நம்முடைய பலஹீனத்தால்தான் பாகிஸ்தான் ஏற்பட முடிந்தது. இன்று செக்ரடரியட்டில் உட்கார்ந்திருக்கும் உத்தியோகஸ்தர்கள் "ஹிந்து ராஜ்யம்" என்று கோஷிக்கின்றனர். இங்கு டிபுடி கமிஷனராக இருக்கும் ரந்தாவா பண்டித நேருவுடன் ஒத்துழைக்க தயாராக இல்லை. ஆனால் புரட்சி சங்கநாதம் முழங்கியபோது இதே ரந்தாவா நம்மை கைது செய்தான். போலீஸிலும், ராணுவத்திலும் இருக்கும் இதே பேர்வழிகள் அன்று வெள்ளையர்களுடன் ஒத்துழைத்தனர்.

•

நாடு முன்னேற்றமடைய சுதந்திரத்திற்காக நாம் போராடினோம் இன்று நம் தேசத்தின் நிலைமை என்ன? லக்ஷக்கணக்கான மக்களுக்கு வீடில்லை. லக்ஷக்கணக்கான மக்களின் மண் சுவர்கள் மீது கூரையில்லை கோடிக்கணக்கான மக்கள் சாலை ஓரங்களில் படுத்து, நிர்வாணமாகத் திரிகின்றனர். மானத்தை மூட துணியில்லை. ஈக்களைப் போல் பிணியால் பீடிக்கப்பட்டு மடிகின்றனர். வைத்திய வசதிக்கு பணமில்லை. லக்ஷக்கணக்கானவர்கள் பஞ்சத்திற்கு பலி. வங்காளத்தில் 35 லக்ஷம் மக்கள் பசியால் புழுக்களைப் போல் பாதவித்து மாண்டனர். நம்மிடம் உணவுதான்யம் இல்லை.

நாட்டின் பசியை, பிணியை, நிர்வாணத்தைப் போக்க பாபூஜி எண்ணினார். அதற்காகவே அவர் நம் சுதந்திர போராட்டத்திற்கு தலைமை வகித்து நடத்தினார். நாடு சுதந்திரம் அடைந்தது. நாட்டின் முன்னேற்றத்திற்காக 5வருஷ திட்டம் ஒன்றைப்போட்டு, கொழிற்சாலைகள் ஏற்படுத்தி, மலைகளின் நெஞ்சத்தைப் பிளந்து, இரும்பு, நிலக்கரி சேகரித்து, நதிகளைத் தடுத்து மின்சாரம் உற்பத்தி செய்து, ராணுவ பலத்தைப் பெருக்கி, நம் சக்தியை வளர்ப்பதை விட்டு நாம் சகோதரச் சண்டையில் மூழ்கினோம்.

அதனால் நிர்வாகமே குலைந்து வருகின்றது. இந்தக் கொலைகாரர்களின் கையில் நிர்வாகம் கிடைத்துவிட்டால் அரசாங்கம் நடக்குமா? கொலைகாரர்களும், குண்டர்களும் அரசாங்கத்தை நடத்த முடியாது.

— தேசத் துரோகிகள் வகுப்புவாதிகளே —

நிர்வாகம் பண்டித நேருவின் கையில் இருந்தால் தேசம் தப்பமுடியும். இல்லையேல் அழிவது நிச்சயம். டில்லி, பம்பாய், பூனாவில் சதிகள் நடக்கின்றன. தேசீய ஜனநாயக வாதிகளை கொல்ல முயற்சிக்கப்படுகிறது அந்த சதிகாரர்களேதான் தேசத்துரோகிகள். நம் மனதில் தேசப்பற்று வளர வேண்டும். சர்க்கார், போலீஸ், ராணுவத்தில் இருப்பவர்களின் மனதில் வகுப்புவாதமோ, மாகாண வாதமோ இருந்தால் நாம் அழிய நேரிடும். நாம் முதலில் சமூக வாதத்தை ஒழிக்க வேண்டும் டில்லி போலீஸ், ராணுவத்தினரின் மனதில் நேர்மை இருந்திருந்தால் பாபூஜியின் நெஞ்சுக்கு எதிராக ஒரு விரலையும் உயர்த்த யாருக்கும் துணிச்சல் ஏற்பட்டிருக்க முடியாது

ஆனால் இங்கு பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களின் மனசாக்ஷி சுத்தமாக இல்லை. அடிமைத்தனத்தை கற்றுக் கொண்டிருந்த அவாகள் சுதந்திரத்திற்குப் பிறகு வகுப்புவாதிகளாக மாறிவிட்டனர்.

வகுப்புவாதிகளுக்கு ஏற்ற இடம் தூக்குமேடையே.

தேசத்தைக் காப்பது நம் லட்சியமானால், வகுப்புவாதிகளுக்கு இடமில்லாமல் செய்யவேண்டும். நாம் அனைவரும் ஒன்றுபட்டு சர்க்காரை "ராணுவம், போலீஸ், செகரடரியட்டில் இருக்கும் வகுப்புவாதிகளை வெளியேற்றுங்கள்," என்று வற்புறுத்த வேண்டும். இல்லையேல் நாம் வாழ முடியாது. சர்க்காரின் பெரிய எதிரிகள் சர்க்காரில் இருக்கும் வகுப்புவாதிகளே. அவர்கள் தேசத் துரோகிகள். அவர்களுக்கு மரணமே சரியான தண்டனை. நான் சர்க்காரில் இருந்திருந்தால் சுதந்திரத்திற்குப் பிறகு துரோகிகளை தூக்குமேடையில் தொங்கவிட்டிருப்பேன்.

•

நம்பிக்கை உள்ளவர்களைக் கொண்டே நாம் சர்க்காரை நடத்த வேண்டும். வகுப்புவாதிகள் அன்றும், இன்றும் துரோகிகளே ஆவர். சர்க்காரில்,

அதிலும் சுதந்திர இந்திய சர்க்காரில் இருக்க அவர்களுக்கு உரிமை இல்லை. தேசத் துரோகிகளின் சரியான இடம் சர்க்காரின் ஆசனங்கள் அல்ல, தூக்கு மேடைகளே.

— சகல வகுப்புகளிலும் துரோகிகள் உண்டு —

முஸ்லிம்களை துரோகிகள் என்று சொல்லுகின்றீர்கள். அரேபியாவிலிருந்து அவர்கள் வந்தவர்கள் அல்ல. நம்மிடையிலிருந்தே தோன்றியவர்கள். ஹிந்து, சீக்கியர்களில் தேசத்துரோகிகள் இருப்பதைப் போலவே, அவர்களிலும் இருக்கின்றனர். ஹிந்துக்கள், சீக்கியர்கள், முஸ்லிம்கள் அல்லது வேறு எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும் அவர்களை சுட்டுத்தள்ளியாகவேண்டும். துரோகிகளுக்கு அது தான் தண்டனை. ஆனால் இந்த தேசத்தில் துரோகிகளுக்குக் குறைவில்லை என்பது நினைவிலிருக்கட்டும் வெள்ளை ஆட்சியில் அடிமைத் தளையில் நம்மைப் பிணைத்து வைத்திருந்தவர்கள் நம்முடைய ஹிந்து, முஸ்லிம், சீக்கிய சகோதரர்கள்தான். அவர்கள் வெள்ளையர்களுடன் சேர்ந்திருந்தனர். பெரிய பெரிய போலீஸ் உத்தியோகஸ்தர்கள், ராணுவ அதிகாரிகள், தொழிற்சாலை முதலாளிகள், ஜமீன்தார்கள், நவாப்புகள், ராஜாக்கள் அன்று தேசத்துரோகிகளாக இருந்தனர். இன்றைக்கும் அவர்கள் தேசத்துரோகிகளாகவே இருந்துவருகின்றனர்.

நாம் கைது செய்யப்பட்டபோது நம்முடைய கைகளில் விலங்கு பூட்டியவன் வெள்ளைக்காரனல்ல. நம்முடைய ஊர்வலங்கள் கூட்டங்கள் மீது சுட்டவன், நம்முடைய குழந்தைகளின் நெஞ்சங்களைப் பிளந்தவன், நம் சகோதரிகளின் கற்பை அழித்தவன், வெள்ளைக்காரனல்ல. பாரதத்தாயின் மடியிலே வளர்ந்த இந்திய சகோதரர்களேதான். பகவத்சிங்கை தூக்குமேடையில் தொங்கவிட்டவன் யார்? வெள்ளையனல்ல, இந்தியன்தான். துரோகிக்கு மதம் கிடையாது; வகுப்பு இல்லை; அவனுடைய மதமும், வகுப்பும் துரோகமேயாகும்.

ஹிந்து, முஸ்லிம், சீக்கியன், பார்ஸி, யாராக இருப்பினும் துரோகிகளை தூக்கிலிடுங்கள், என்று நாம் பட்டவர்த்தனமாகச் சொல்லுகிறோம். அவர்களை சுட்டுத் தள்ளுங்கள், நாம் சந்தோஷம் அடைவோம் நம் கையில் சர்க்கார் இருந்தால் வகுப்புவாதிகளை அதிகார பீடங்களிலிருந்து இறக்கி, தேசத்துரோகிகளை ஆசனங்களிலிருந்து நெட்டித் தள்ளி, தூக்குமேடையில் தொங்கவிட்டிருப்போம். அவர்களுக்கு பதிலாக ஒரு தொழிலாளியை அந்த இடத்தில் அமர்த்தியிருப்போம்.

நம் கையில் அதிகாரமிருந்தால் இன்று அதிகார பீடங்களில் உல்லாசமாக அமர்ந்திருக்கும் அவர்கள் அங்கு காணப்படமுடியாது. நரகத்தில் பொசுங்கிக் கொண்டுதான் இருப்பார்கள். நானும், டாக்டர் ராம் மனோகர் லோஹியாவும் லாகூர் சிறையில் இருந்தபொழுது நம்மை சித்திரவதை செய்தவர்கள் ஹிந்துக்களே. அதில் ஒரு பிராம்மணனும் இருந்தான். அவர்கள் தேசத்துரோகிகள் இல்லையா?

சிந்து சிந்தியர்களுக்கே

கராச்சி முஸ்லிம் லீக் பத்திரிகை ஒன்று கீழ் வருமாறு எழுதுகின்றது. "முஸ்லிம்கள் பீஹார், டில்லி, கிழக்குப் பஞ்சாபிலிருந்து ஹிந்து சீக்கியர்களிடம் அடிபட்டு எப்படியோ இங்கு வந்து சேர்ந்து விட்டனர். அதற்கு பதில் சிந்துவில் உள்ள முஸல்மான்களை பழிக்குப்பழி வாங்க முடிவு செய்து விட்டதாக தெரிகிறது. சிந்து, சிந்துக்காரர்களுக்கு மட்டிலுமே தாயகம் என்பதை ஓடிவந்திருக்கும் அகதிகள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இங்கு இருக்க வேண்டுமென்பது அவர்களின் ஆசையாக இருந்தால் சிந்துக்காரர்களின் தயவை நாடியே இருக்கவேண்டும்."

'பாகிஸ்தான் எங்கள் பிறப்புரிமை' என்று கோஷித்த முஸல்மான்கள் இம்மாதிரி எச்சரிக்கைகளை லட்சியம் செய்யமுடியாது. பாகிஸ்தானிலிருந்து ஹிந்து, சீக்கியர்கள் வெளியேறியதைப்போல் முஸ்லிம் அகதிகளும் அடிபட்டு வெளியேற வேண்டிய நாளும் வரலாம். என்னே! முஸ்லிம்களின் பரிதாப நிலைமை!

கொசுக்கள் சுயராஜ்ஜியம்.

ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையின் லாகூர் நிருபர் கீழ்வருமாறு எழுதுகிறார். "இதற்குமுன் லாகூரில் பல சமூகங்களைச் சேர்ந்த பலவித உடைகள் அணிந்த பலதரப்பட்ட மனிதர்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்று லாகூர் ஒரே சமூகத்தினரைக் கொண்ட நகரமாக இருக்கிறது. மக்கள் பட்டினி கிடக்கின்றனர். வியாபாரம் இல்லை. மால் ரோடைப் போன்ற இடமும் நாற்றமெடுத்து சீர்கெட்டு கிடக்கிறது. அதிலிருந்து 100 கெஜ தூரத்தில் தேங்கிக் கிடக்கும் சாக்கடை ஜலத்தின் துர்வாடையால் மால் ரோடில் உள்ள கடைகளிலும் மனிதர்கள் இருக்க முடியாமல் போய்விட்டது. குளிர்காலமாக இருந்தும் குவிந்து கிடக்கும் அசுத்தத்தின்மீது ஈக்களும் கொசுக்களும் மொய்த்துக்கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஆதரிப்பாரற்ற பிச்சைக்காரர்களின் ஒரே கூட்டம். 200 கஜம் நடப்பதற்கு முன் நான் 20-க்கு மேற்பட்ட பிச்சைக்காரர்களைப் பார்த்தேன்."

இதைப் பார்த்தால் பாகிஸ்தானில் பிச்சைக்காரர்கள், ஈக்கள், கொசுக்களுக்கும் சுயராஜ்ஜியம் கிடைத்துவிட்டதாகத் தெரிகிறது.

சென்ற வாரத் தொடர்ச்சி.

—: புனர் வாழ்க்கை. :—

(o)

கோடரிப் பெருமை யாருக்கு?

அப்படியாயின் மிஸ்டர் தாராசிங்கையும், சியாம பிரசாத் முகர்ஜியையும் வருங்கால சரித்திர ஆசிரியன் அலட்சியம் செய்துவிடமுடியாது. மிஸ்டர் ஜின்னு வாகிலும் ஏழெட்டு வருஷங்கள்வரை பாகிஸ்தானுக் காக ஏதோ, என்னமோ, எப்படியோ நடத்தினுர். கள்ளனுக்குள் புகுந்த குள்ளர்களான இவ்விரண்டு பெரியார்களும் மூன்றே மாதக் கிளர்ச்சியில் வங்க பஞ்சாப் மாகாணங்களை கூறு போட்டு மிஸ்டர் ஜின்னுவின் பாகிஸ்தானையே சின்னுபின்னமாக்கினர். மிஸ்டர் ஜின்னுவும் இவர்களுடைய கோரிக்கைக்கு பணியவேண்டி வந்தது. எனவே நாட்டைக்கூறு போடுவதுதான் சாமர்த்தியம் என்ருலும் உண்மை யான புகழுக்கு உரியவர்கள் தாராசிங்கும், முகர்ஜி யுமே ஆவார்கள்.

பிரிட்டிஷ் திருவிளையாடல்கள்.

கள்ளங்கபடமற்ற ஸீக் சகோதரர்களுக்கு மிஸ் டர் ஜின்னு அடைந்துவிட்ட பாகிஸ்தான் இதுவரை உலகத்தில் நடந்திராத புதுமையாய் காட்சி அளிக் கின்றது. பிரிட்டிஷாரின் காலடிபட்ட துரதிர்ஷ்ட நாடுகளிலெல்லாம் முடிவில் ஏதாவது ஒருவகை பாகிஸ் தான் ஏற்படுத்தியே இருக்கிருர்கள். இது அவர்களு டைய பாரம்பர்ய வழக்கம் பாமர ஸீகர்களுக்கு பிரிட்டிஷ் தகிடுதத்தங்கள் தெரிந்திருக்கமுடியாது

தீவிர போராட்டத்திற்குப் பிறகு அமெரிக்கா சுதந்திரம் அடையவேண்டிய கட்டம் வந்தது. சுயநிர்ணய உரிமை கேட்கும்படி பிரிட்டிஷார் உடனே கனடியர்களைத் தூண்டிவிட்டு உள்நாட்டு கலவரங்களைத் நடத்தினர். பாகிஸ்தானைப் போலவே கனடா அமெரிக்காவிலிருந்து பிரிக்கப்பட்டது. நடந்ததென்ன! சுதந்திர அமெரிக்கா இன்று சர்வ தேச அரங்கத்தின் முன்னணியை அலங்கரிக்கின்றது. பிரிட்டிஷ் வலையில் அகப்பட்டு பிரிவினையைக் கோரிய துரதிர்ஷ்ட கனடா பின்னணியிலும் இடம்பெற முடி யாமல் தவித்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிருேம் அமெரிக்காவிலிருந்து வெளியேறிய பிரிட்டிஷ் துருப்பு கள் கனடாவில் போய் தங்கின, கனடாவின் பரி தாப நிலைமை ஒரு நூற்றுண்டுக்குப்பிறகும் உலகத் திற்கு ஒரு படிப்பினையாக இருந்துவருகிறது.

இதே நூற்றுண்டில் ஐரிஷ் மக்களின் சுதந்திர போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது அங்குள்ள ரோமன் கத்தோலிகர்கள், பிராட்டஸ் டெண்டுகளுக்கிடையே பிரிட்டிஷார் மதச்சண்டை மூட்டிவிட்டனர். ஒரு பிரதேச மக்களுக்கு சுய நிர்ணயப்பாடம் சொல்லிக்கொடுத்து அயர்லாந்தி லிருந்து அல்ஸ்டரைத் தனியாகப் பிரித்து ஒருவகை பாகிஸ்தான் ஏற்படுத்தினர். பிரிட்டிஷ் ராணுவத்தை வெளியேறும்படி ஐரிஷ் மக்கள் கூறியபோது டப்ளி னில் இருந்த பிரிட்டிஷ் ராணுவம் அல்ஸ்டருக்கு ஜாகை மாற்றிக்கொண்டது அல்ஸ்டர் மக்கள் இன்றைக்கும் அடிமைகளாகவே இருந்துவரு கின்றனர். இருந்துகொண்டே வெளியேறிவிட் டோம் என்று பறை சாற்றுவது பிரிட்டிஷ் செப்பிடு வித்தைகளில் ஒன்று.

பிரிட்டிஷார் எகிப்திலும் இதே கைவரிசையைக் காட்டினுர்கள். சுதந்திரக் கோரிக்கைக்கு பணிய நேர்ந்தபோது சூடானியர்களுக்கு சுயநிர்ணய மந்தி ரோபதேசம் செய்து சூடானை எகிப்திலிருந்து தனி யாகப் பிரித்தனர். எகிப்திய வாலிபர்கள் 'வெள்ளை யனே வெளியேறு' என்று முழங்கியவுடன் கெய்ரோ விலிருந்து வெளியேறிய பிரிட்டிஷ் துருப்புக்கள் சூடானில் கூடாரங்கள் போட்டன. சூடானும் விடுதலை அடைந்தபாடில்லை. அண்டையில் பிரிட்டிஷ் துருப்புக்களை வைத்துக்கொண்டு எகிப்தும் பூரண சுதந்திரம் அடைந்தபாடில்லை. எகிப்தில் இருப்பதும் சூடானில் இருப்பதும் பிரிட்டிஷாருக்கு ஒன்றுதான். பிரிட்டிஷ் நலன் எவ்வகையிலும் பாதிக்கப்படவே இல்லை. பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் திருவிளையாடல் இதுதான்.

1914 மகாயுத்தத்திற்கு பிறகு பாலஸ்தீன அரா பியர்களை தூண்டிவிட்டு துருக்கிக்கு விரோதமாக கிளர்ச்சி செய்யச் சொல்லி பிரிட்டிஷார் பாலஸ் தீனத்தை தனி நாடாக்கினர். பிரிட்டிஷ் துர்ப் போதனைக்குள்ளான பாலஸ்தீன மக்கள் சில நாட்க ளில் துருக்கிக்குப் பதில் பிரிட்டிஷாருக்கு அடிமை களாய் இருப்பதை உணர்ந்தனர். உடனே அவர்கள் வெள்ளையர்களை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தை தொடங்கிவிட்டனர். இதர நாடுகளைப்போல் வெள்ளை யர்களின் சுயநிர்ணய மாத்திரை உட்கொள்ள பாலஸ்

தீனில் ஒரு கூட்டமும் இருக்கவில்லை. அதனுல் வெள்ளையர்கள் இங்கு முற்றிலும் புதியதொரு முறையை கையாளவேண்டி வந்தது. வெளியிலிருந்து யூதர்களைக்கொண்டுவந்து பலவந்தமாய் குடியேற்றி அவர்களைத்தூண்டிவிட்டு தனிநாட்டுக் கோரிக்கை விடுக்கும்படிச் செய்தனர். இன்று பாலஸ்தீனத்தை யூதநாடென்றும், அரபிய நாடென்றும் கூறுபோட்டு விட்டனர் இந்தியாவில் லீகர்கள் தனிநாடு கேட்டது போலவே பாலஸ்தீனில் யூதர்கள் தனிநாடு கேட்டனர். உலகெங்கிலும் உள்ள யூதர்களைக்கொண்டு வந்து பாலஸ்தீனில் குடியேற்றினது போலவே இந்திய அரசியலிலும் லீக் தலைவர்களைப் புகுத்தினுர்கள். வெளியேறும்படி நாளை அராபியர்கள் நிர்ப்பந்தித்தால் பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறி பாலஸ்தீனத்திலேயே போய் தங்குவார்கள் என்பது நிச்சயம்.

இந்தியாவில் நடந்திருப்பதும் அதுவே. இந்திய மண்ணில் காலடி வைத்த அன்றே யாரை யாருடன் சிண்டு முடிந்துவிடமுடியும் என்று வெள்ளையர்கள் தீவிரமாய் சிந்தித்தார்கள் பாலும் தேனும் போல் கலந்திருந்த ஹிந்து முஸ்லிம்களைப் பார்த்து முதலில் அவர்களுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. இரண்டு நூற்றுண்டுகளின் பிரித்தாளும் தந்திரத்திற்குப் பிறகு, கடைசியில் சகோதரச்சண்டை மூட்டுவதில் அவர்கள் வெற்றி பெற்றேவிட்டனர். சகோதரச் சண்டையைக் காரணமாகக் காட்டி நாட்டைப் பிரித்த வெள்ளையர்கள் காங்கிரஸின் 'வெள்ளையனே வெளியேறு' இடி முழக்கத்திற்குப் பிறகு டில்லியிலிருந்து சுருட்டப்படும் பிரிட்டிஷ் ராணுவ படுக்கைகள் ராவல்பிண்டியில் விரிக்கப்படமாட்டாது என்பது என்ன நிச்சயம். பல நாடுகளில் கையாண்ட வெள்ளையர்கள் பிரிந்த பிரதேசத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ளும் பழைய வழக்கத்தை பாகிஸ்தான் சம்பந்தப்பட்டவரை அனுஷ்டிக்கமாட்டார்கள் என்று எண்ணிவிட முடியாது. இந்நிலையில் பாகிஸ்தான் மிஸ்டர் ஜின்னுவின் வெற்றியா? பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் வெற்றியா? வெள்ளை மனம் படைத்த லீக் சகோதரர்கள்தான் இதை முடிவு செய்யவேண்டும்.

சரித்திரத்தில் கோடரிகளுக்கு இடமுண்டா?

பிரிட்டிஷார் இந்தியாவைத் துண்டாடினர். மிஸ்டர் ஜின்னுவுக்கு பாகிஸ்தானும் கிடைத்தது. தேசம் துண்டாடப்படுவதை உலகம் கண்பமாக நோக்கத் தயாரில்லை. கோடரி வேலையில் பிரிட்டிஷாருக்கு உடந்தையாக இருந்தவர்களின் பெயர்கள் மக்கள் உள்ளங்களிலோ, சரித்திரத்திலோ இடம்பெற வில்லை. உலகம் அவர்களை மறந்தேவிட்டது. அமெரிக்காவிலிருந்து கனடாவையும், அயர்லாந்திலிருந்து அல்ஸ்டரையும், எகிப்திலிருந்து சூடானையும், பாலஸ்தீனத்திலிருந்து யூத நாட்டையும் பிரிப்பதற்கு பிரிட்டிஷாருக்கு உடந்தையாய் இருந்தவர்களின் பெயர்கள் எத்தனை பேருக்குத் தெரியும்? பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்து நாட்டைக் கூறுபோடவேண்டுமென்று கோரியவர்கள் அங்கெல்லாம் இருந்திருப்பார்களல்லவா? அவர்கள் யார்? அவர்களின் பெயர்கள் என்ன? என்பதைப்பற்றி உலகத்திற்கு கவலையிருக்கவில்லை. அநாமதேயப் பேர்வழிகள் என்று அவர்களை சரித்திர ஆசிரியர்களும் கைவிட்டுவிட்டனர். அந்த கருங்காலிகளின் பெயர்கள் சரித்திரத்திலே இடம் பெற்றுவிட்டால் நாட்டின் சுதந்திர சரித்திரத்திற்கே களங்கம் ஏற்பட்டுவிடும் என்பது உண்மை.

ஆனுல் அமெரிக்க சுதந்திரத்திற்காக உழைத்த வாஷிங்டனையும், ஆப்ரஹாம்லிங்கனையும் அயர்லாந்தை விடுவித்த டிவேலராவையும், எகிப்து தேசீயத் தலைவர் ஜாக்லூல் பாஷாவையும் பாலஸ்தீன முப்தியையும் விட்டு சரித்திரம் எழுதமுடியுமா? இல்லை. அவர்களுடைய சரித்திரமே அந்த நாடுகளின் சரித்திரம். அவர்களை அறியாத மக்கள் யாரும் இல்லை. இருக்கவும் முடியாது.

எனவே மிஸ்டர் ஜின்னுவை வருங்கால சரித்திர வீரர் என்று நினைப்பதும், சொல்லிப் பெருமைப்படுவதும் பைத்தியக்காரத்தனம் என்பதற்கு சரித்திரமே சான்று. பாகிஸ்தான் ஏற்பட்டு அதற்குள் இந்திய முஸல்மான்கள் ஜின்னுவின் பெயரையும்கூட மறந்துவிட்டனர்.

பாகிஸ்தான் லீக் வெற்றியா?

இன்றைய அரசியல் உலகில் ஜின்னு ஒன்றையும் சாதித்துவிடமுடியாது இறக்குமதியாகும் ஐரோப்பிய முடிவுகளை தம்முடைய முடிவுகள் என்று தயங்காமல் சொல்ல லீகர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டிருந்தது. தாங்கள் செய்த முடிவு வெற்றியடைந்துவிட்டது என்று ஆர்ப்பரித்தனர். இந்தியப் பிரிவினைக்கு சகல கட்சிகளும் சம்மதித்துவிட்டதாக வெள்ளையர்கள் சொன்னுர்கள். நடந்தேறி உள்ள பிரிவினைக்கு எந்தக் கட்சியும் சம்மதிக்கவும் இல்லை. சம்மதிக்கவும் முடியாது. அதைக்குறித்து சிந்திக்க அவகாசம் இல்லாமல் குழப்பங்களையும், கலகங்களையும் வெள்ளையர்கள் தூண்டிவிட்டனர். வேறு வழியின்றி பிரிட்டிஷ் மூளையின் பிரிவினைத்திட்டத்தை ஏற்க வேண்டியதாயிற்று.

(தொடரும்)

Printed by V JAYARAM at his Sri Rama Printing Works, 129, Kadalangudi E St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.